# முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு. கருணாநிதி..

2 அணா

முரசு 2 | சென்னை | 29-7-55 | வெள்ளி | ஒலி 18


# ஒட்டுங்கள் ஒட்டுங்கள் !!

நாகல் உண்ணும் நாயும் பன்றியும் நுழையலாம்; ஆனால் நாகரிக மனிதன கால் வைக்கக் கூடாது. —இது இறைவனார் கோயிலிலே குடியேறி யிருந்த நிலைமை!

வேசியொருத்தியின் நாற்றம் வீசும் படுக்கையிலே இரவெல்லாம் வேதியன் புரண்டிருப்பான்; ஆனால் பகலிலே அவன் ஒரு பஞ்சமனைப் பார்த்துவிட்டால் தடாகத்தை நோக்கி ஓடுகிறான்!

குஷ்டரோகப் பார்ப்பானுக்கு இவ்வளவு கொடுமைகள் இழைக்கப்படவில்லை. அவனுடைய சீழ் வடியும் திரேகம் தன் மீது பட்டால் பரபரப்பு கொள்ளாத புராணிகன், பறையனைத் தொட்டால் பீதி அடைகிறான்.

—இவை அந்நாள் நிலைமை! வைக்கத்திலே பெரியார் ராமசாமியை போருக்கழைத்த காரணங்கள்!



இப்போது ஆதித் திராவிடனைத் தொட்டால் தீட்டு ஒட்டுவதில்லை. 'விலகிப்போ' -என்று வார்த்தைகளை உதிர்ப்பவன், கைகளிலே விலங்கு மாட்டிக் கொள்ளும் மாபெரும் குற்றம் செய்தவனாகிறான்.

இதைத்தான் சென்னை அரசினர் வர்ணச் சுவரொட்டிகளாகத் தயாரித்து நாடெங்கும் ஒட்டுவதற்கு இருந்தார்கள். ஆனால்...?

அந்தச் சுவரொட்டியை ஒட்டுவதற்கு காமராசரின் கைகள் நடுக்கம் கொண்டன; நா குழறியது! 'நாடுமாறிகளாய் வந்து நாடாளும் ஆரியம்' என்று நாம் சொன்னபோது முகத்தைச் சுழித்தவர்கள்-முணகியோர்கள் இவர்களெல்லாம் உணரும் வகையிலே அரசாளும் அமைச்சர்மீதே ஆணை செலுத்தி விட்டது ஆரியம்!

சுவரொட்டிகளை 'வாபஸ்' பெற்றார், காமராசர். அந்தோ! சுயமரியாதைக் களத்திலிருந்தும் 'வாபசா'கி, அவர் வெகு தூரம் புறங்காட்டி ஓடிவிட்டார்! தேரும், குடையும், தென் தமிழ்ப் படையும் அவர் பின்னே அணிவகுத்து — ஆர்ப்பரித்து நிற்க; வில்லை ஒடித்தெறிந்து விட்டு, வீரனென்ற பட்டத்தைக் காற்றிலே பறக்கவிட்டு ஓடி மறைந்துவிட்டார், விருதுநகரத்தார்!

தென்னிலங்கை வேந்தன் இராவணனே முன்வந்து ஆரிய இராமனுக்கும், அனுமன் படைக்கும் பயந்து, தெண்டனிட்டு தோல்வியை ஒப்புக் கொள்வதைப்போல; காமராசர் ஆரியத்தின் கால்களிலே விழுந்துவிட்டார்!

விபீஷணன் செய்ததுகூட நமக்கு அவ்வளவு வேதனை அளிக்கவில்லை; ஆனால், வீரன் இராவணனே விபீஷணனாகும் போதுதான் நாமெல்லாம் தரையில் வீழ்ந்த மீனாகத் தவிக்க வேண்டியிருக்கிறது!

'குலக் கொழுந்தே' என்றோம்-அந்தக் கொழுந்து ஆரியத் தீயிலே அகப்பட்டு வாடி வதங்கிவிட்டது!

பிரகலாதனுக்குப் பணிந்த இரணியனாக, பார்ப்பனீயத்துக்குப் பணிந்துவிட்டார், காமராசர்!

'கேவலம்; சுவரொட்டிகள் தானே, அவை! அக்ரகாரத்தை எதிர்தது‍த் திருப்பப்பட்டிருக்கும் பீரங்கிக் குழல் அல்லவே! பின் ஏன் இப்படிப் பயந்து சாகிறீர்கள்?'-உப தலையங்கம் எழுதி, புல்லேந்திகளின் பட்டாளத்துக்குத் தளபதி வேலை பார்த்த 'இந்து'வாரைப் பார்த்து காமராசர் இப்படிக் கேட்டிருக்கலாம்.

"சுவரொட்டிகள் வைப்பதிலே என்ன தவறு கண்டுவிட்டீர்கள்? அப்படி என்ன பார்ப்பனர்கள் திருந்திவிட்டார்களா? திருவையாறு தியாகையர் உற்சவத்திலே தேன் மதுரத் தமிழோதும் தண்டபாணி தேசிகர் உட்கார்ந்து பாடிய காரணத்தால், 'மேடை தீட்டாகிவிட்டது' என்று கூவி ஆண்டுகள் சில மறையவில்லையே! இனிமேல் 'திருவையாறு'கள் நடக்காமலிருக்கத்தானே இப்படிச் செய்கிறோம்!"—விருதுநகரார் இப்படி வேதியர் கூட்டத்துக்கு விளக்கம் தந்திருக்கலாம்!

விளக்கம் தருவதற்கு அவரால் முடியாவிட்டால்கூட நம்மை அழைத்திருக்கலாம் —ஆரியம் வெடகித் தலைகுனிகிற வகையிலே ஆணித்தரமான ஆதாரங்களை அள்ளிக் குவித்திருப்போம்.

"கக்கூசிலே ஆண்-பெண் வித்யாசம் காண்பிக்க படமெழுத வேண்டியிருக்கிறது. அந்த அளவுக்குக் கல்லாதார் நிரம்பியிருக்கும் நாட்டிலே, பார்ப்பனன ஒருவன் ஆதித் திராவிடனை அப்பால் போகச் சொல்வதும், அதற்காக சிட்சை பெறுவதாகவும் சித்திரம் போட்டுக் காட்டுவதிலே என்ன குற்றம் கண்டுவிட்டீர்?" என்று இடித்துக் கேட்டிருப்போம்.

செய்யத் தவறிவிட்டார் காமராசர்! தன்மானப் போர்ப் பட்டியலிலே இடம் பெற்றிருந்த அவரது பெயர் இப்போது அழிக்கப்பட்டு விட்டது!

அவர் செய்யத் தவறியதை—தயங்கியதை நாம்தான் செய்து முடிக்க வேண்டும்.

அரசாங்கப் பணிமனைகளிலே, ஆயிரக் கணக்கில் தீண்டாமைச் சுவரொட்டிகள் குவிந்து கிடக்கலாம் — அதை வெளிக் கொணர்ந்து சுவரெல்லாம் ஒட்ட வேண்டிய அவசியம் இப்போது ஏற்படவில்லை.

**ஏனெனில், திராவிட முன்னேற்றக் கழகத்துத் தலைமை நிலையம் அரசாங்கச் சுவரொட்டிகளைப் போலவே ஆயிரமாயிரம் சுவரொட்டிகளைத் தயாரித்திருக்கிறது!**

ஒரு ஓரத்திலே தி. மு. க. என்று பொறிக்கப்பட்டிருக்கும் அந்தச் சுவரொட்டிகள், 'அறிவக'த்திலிருந்து ஒவ்வொரு கிளைக் கழகத்திற்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

கிளைக் கழகத் தோழர்களே! ஆரிய வலையில் வீழாத நண்பர்களே! நேற்றுவந்தார் காமராசர்; நாளை போய்விடுவார்! நாமோ என்றும் இருக்க வேண்டியவர்கள்; குருதி வடிந்தாலும் இழிவு

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

## கொடி எரிப்புக் கிளர்ச்சி! (தலையங்கம்)

# கலப்படம்

"ஆசைகளெல்லாம் குதிரைகளாய் இருந்தால் பிச்சைக்காரர்கள் நடந்தா போவார்கள்?"
—ஆங்கிலப் பழமொழி.

சிறைதண்டனை மட்டும் இல்லாதிருந்தால் நாங்கள் போராட்டம் துவங்காமலா இருப்போம்?'
—எல்லை காக்கும் வீரர்கள்.

★

"குதிரையை ஆற்றங்கரைக் குத்தான் இழுத்துச் செல்லலாம். ஆனால் அதைத் தண்ணீர் குடிக்கச் செய்ய முடியுமா? "
—ஆங்கிலப் பழமொழி.

பச்சைத் தமிழனென்னும் போர்வையாலதான் மூடலாம். ஆனால் பச்சைத் தமிழுணர்ச்சியையும் ஊட்ட முடியுமா?
—காமராசரைப் பார்த்து ஒரு திராவிடன்.

★

"யோசிப்பவர்களுக்கு வாழ்க்கை ஒரு இன்ப நாடகம். உணர்பவர்களுக்கு வாழ்க்கை சோக நாடகம்"
—வால்போல்.

பாராட்டியவர்களுக்கு காமராசர் ஒரு பார்ப்பன அடிமை. என்னைப்போல் பயன் உணர்பவர்களுக்கு காமராசர் ஒரு பச்சைத் தமிழன்.
—சிந்தாதிப்ரிபேட்டை வாசி.

★

"பலஹீனமே!—உன் பெயர்தான் பெண்"
—ஷேக்ஸ்பியர்.

பலஹீனமே!-உன் பெயர்தான் காமராசர்!
—'பச்சைத் திராவிடன்'

★

"தூங்குகிற நரி கோழிகளைத்தான் கனவு காணும்"
—ரஷ்யப் பழமொழி

தூங்குகிற ஆச்சாரியார் சென்னை ஜார்ஜ் கோட்டையைத்தான் கனவு காணுகிறார்.
—சுப்ரமணியம்.

★

"எதிரியை சுலபமாக மன்னித்து விடலாம். ஆனால் நண்பனை மன்னிப்பதுதான் கடினம்!"
—டிஹுஸி.

கல்வித் திட்டம் கொணர்ந்து எதிரியான ஆச்சாரியாரைக் கூட மன்னித்து விடலாம். தீண்டாமைச் சுவரொட்டிகளை 'வாபஸ்' பெற்ற நண்பர் காமராசரை மன்னிப்பது தான் கடினம்!
—உண்மை உணர்ந்தோன்.

★

"வெட்டி முறிக்கப்பட்ட உண்மை என்றைக்காவது ஒரு நாள் தலை தூக்கியே தீரும்"
—பிரயன்ட்.

என் போராட்டத்தில் எல்லோரும் கலந்து கொள்ள வேண்டும். ஆனால் இதற்கு மாறாக விடுதலையில் தலையங்கமும், குத்தூசியும் எழுதப்பட்டு வருகிறது.
—பெரியார் அறிக்கை.

★

"நீ கூடவா, புரூட்டஸ்?"
—(அருமைத் தோழன் புருட்டசின் உருவிய வாளைப் பார்த்ததும் சாகப் போகும் ஜூலியஸ் சீசர் சொல்வதாக,)
—ஷேக்ஸ்பியர்.

நீங்கள் கூடவா, பெரியாரே!
—காமராசர்.

## எங்கே அவர்கள்?

தோழர் அஜய் கோஷ் பம்பாய் டாக்டர் பாலிகா அவர்களின் ஆலோசனையின் பேரில், இந்திய சர்க்கார் அனுமதியின்பேரில், தன் வியாதியைக் குணப்படுத்திக்கொள்ள சோவியத்நாடு சென்றுள்ளார். தோழர் டாங்கே உலக சமாதானக் கூட்டத்தில் பங்குகொண்டபின், இன்று பீக்கிங்கில் நடக்கும் உலகத் தொழிற் சங்கத்தின் ஆசியக் காரியாலயக் கூட்டத்தில் பங்கு கொள்ள பீக்கிங்கில் இருக்கிறார். உலக டெக்ஸ்டைல்ஸ் குளோத்திங் சம்மேளனத்தின் கூட்டம் ருமேனியாவில் நடக்கிறது. அதில் பங்கு கொள்ள தோழர் ராமமூர்த்தி சென்றுள்ளார்."
—'ஜனசக்தி' (24-7-55)

## பாகனின் கதி பாரீர்--பாடம் பெறுவீர்!

★

அஸ்ஸாம் ஆயில் கம்பெனி என்ற பெயரிலே, பெரிய அளவிலே, விந்தியத்துக்கு அப்பால் எண்ணெய் திரட்டும் ஆலையொன்று உருவாகப் போகிறது!

ஊக்ரிஜான், மெரோன் பகுதியிலே பூமிக்கடியில் ஓடிக்கொண்டிருக்கும் எண்ணெய் அருவியை வெளியில் கொண்டுவந்து, தூய்மைப் படுத்தத் திட்டம் தயாராகி விட்டது!

வெளிநாட்டுக் கம்பெனி ஒன்றின் உதவியுடன் அஸ்ஸாமை அலங்கரிக்கும் வேலை நடைபெறப் போகிறது.

"ஏனப்பா பொருமைப்படுகிருய்? தெற்கே எண்ணெய் கிணறுகள் ஏது, தோண்டி எடுத்து தொழில் நடத்துவதற்கு?" என்று 'குத்தல் மொழிகள்' கிளம்பலாம்!

தென்னகத்தில் 'எண்ணெய் வயல்கள்' இல்லாமலிருக்கலாம். ஆனால் பெரிய அளவில் தொழில் துவங்குவதற்கான வசதிகள் இல்லையென்று மறுக்க முடியுமா?

எண்ணெய் ஆலை இல்லாவிட்டால் இயந்திரங்கள் அமைப்பதை யார் தடுத்தார்கள்?

ஆந்திரத்திலே தொழில் உருவாக்கும் திட்டங்களை செயல் படுத்துவதற்கென 800-கோடி ரூபாய்கள் ஒதுக்கலாமென நினைத்தார்களாம். ஆந்திரத்திலே ஆலைச் செல்வம் நிறைந்திருக்க வேண்டுமானால், 800-கோடி தேவையென்று 'டெல்லிக்காரர்களுக்கு விஞ்ஞாபனம்' தீட்டியது, தெலுங்கர் அரசு!

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக அந்த 800-கோடி ரூபாய்கள் மத்திய சர்க்காரால் படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இப்போது 200-கோடி ரூபாய்களாக ஆக்கப்பட்டு விட்டதாம்!

"இந்தத் தொகையும் குறைக்கப்படாவிட்டால் அது நாம் செய்த பாக்யம்தான்!" என்று கண்ணீர் வடிக்கிறார் அமைச்சர் காளா வெங்கடராவ்!

ஆந்திராவுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்! அஸ்ஸாமுக்கு ஆலிங்கனத்தோடு கூடிய வரவேற்பு!

தெற்கு காய்ந்து சருகாகிறது! வடக்கே 'காய கல்ப' சிகிச்சை நடைபெறுகிறது!

★★★ ஆமதாபாத்துக்கு அருகேயுள்ள விஸ்நகரில் ஒரு சாதுவின் முகாமில் இரண்டு யானைகள் இருந்தனவாம். அவைகளுக்குத் தீனி போட்ட பாகன் ஒரு யானைக்கு மட்டும் அதிகமாக ஆகாரம் தந்தானாம். எவ்வளவு நாளைக்குத்தான் இந்த 'ஓர வஞ்சனை'யை அது பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? ஜூலை 22-ந் தேதியன்று குறைந்த உணவால் பாதிக்கப்பட்ட அந்த யானை, பாகனைத் தூக்கி மிதித்து விட்டதாம். பிறகு ஆமதாபாத்திலிருந்து இன்னொரு பாகன் வந்து ஆயுதங்களின் உதவி கொண்டு யானையை அடக்கினனும்.

★★ 'வேற்றுமை கண்டு வெகுண்டது யானை'— என்று தலைப்பு தருகிறது, 'சுதேசமித்திரன்.'

ஆமாம்; வேற்றுமை அதிகமானல் யானை மட்டுமென்ன; தென்னகத்து மக்களும் வெகுள மாட்டார்களென்று யார் சொன்னது?

அந்தப் பரிதாபத்துக்குரிய பாகனுக்கு நேர்ந்த கதி பண்டிதர் அரசுக்கும் நேராமலிருக்க வேண்டும்.—இதைத்தான் தேசிய நண்பர்களும் விரும்புவார்கள்.

அவர்கள் விருப்பம் நிறைவேற வேண்டுமானல் அங்கே முறுவலித்து நிற்கும் 'அஸ்ஸா'மும், இங்கே முழந்தாளிட்டுக் கிடக்கும் 'ஆந்திர'மும் உருவாகாமலிருக்க வேண்டும்!

Bleed through

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 29—7—55 வெள்ளி

## கொடி எரிப்புக் கிளர்ச்சி !

வடநாட்டு அரசு, இந்தி மொழியைத் தமிழகத்தில் திணிக்கும் கொடுமையை எதிர்த்து பெரியார் ராமசாமி அவர்கள் போர்க் கொடி உயர்த்தியிருக்கிறார். இந்திய தேசியக் கொடியை தமிழ் நாடெங்கும் ஆகஸ்ட் முதல் நாளன்று கொளுத்துவது என்று திருச்சி திராவிடர் கழக நிர்வாகக் குழுவிலே தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இந்தக் கொடி எரிப்புக் கிளர்ச்சியிலே தி. மு. கழகத்தார் கலந்து கொள்வதில்லையென்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டு விட்டது. கழகத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிடநாடு' இதழ் மூலம் "ஏன் கலந்து கொள்ளவில்லை?" என்பதற்கான விளக்கங்களைத் தந்திருக்கிறார். அத்துடன் பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களின் அறிக்கையிலும் திராவிடர் கழகத்தின் கிளர்ச்சியிலே தி. மு. க. கலந்து கொள்ளாது-என்பது விளக்கப்பட்டிருக்கிறது.

திராவிடர் கழகத்தார் நடத்துகிற கிளர்ச்சி—அதிலே திராவிட முன்னேற்றக் கழகம் கலந்து கொள்ளாது-என்று கூறப்பட்டுவிட்டது. ஒருகட்சி நடத்துகிற கிளர்ச்சியிலே, இன்னொரு கட்சி கலந்து கொள்ளாது என்று வலியச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன வந்தது என்று யாரும் ஐயமுற வேண்டிய அவசியமேயில்லை. ஏனெனில், திராவிடநாடு தனியாகப் பிரியவேண்டுமென்பதிலும், வடவர் ஆதிக்கம் ஒழிக்கப்பட வேண்டுமென்பதிலும், சமுதாயப் பொருளாதாரத் துறைகளில் ஏற்றம் காண எண்ணுவதிலும்—இரு கழகங்களும் ஒரே கொள்கையைக் கொண்டவையாகும். ஆகவேதான், இரண்டில் எந்தக் கழகம் ஒரு போராட்டத்தை ஆரம்பித்தாலும், அந்தப் போரில் இன்னொரு கழகமும் கலந்து கொள்ளுமா என்று நாடு ஆவலோடு எதிர்பார்க்கிறது.

வடவர் ஆதிக்கத்தை எதிர்த்து, திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தின்போது, அதிலே திராவிடர் கழகம் கலந்து கொள்ளுமா? பெரியார் கலந்து கொள்வாரா?-என்றெல்லாம் பொதுமக்கள் எதிர்பார்த்தனர். திராவிடர் கழகம், அந்தக் கிளர்ச்சியில் கலந்த கொள்ளாது என்ற கருத்தை 'விடுதலை'யிலேயே பெரியார் அவர்கள் அப்போது விளக்கி விட்டார்கள். தி. மு. கழகம் தனித்து நின்று மும்முனைப் போரை நடத்தியது. ஐயாயிரவர் சிறை புகுந்தனர். ஆறு பேர் மாண்டனர். அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. அந்த அடக்குமுறைத் தாண்டவத்தைக் கண்டித்து பெரியார் அவர்கள் நாடெங்கும் கண்டனக் கூட்டங்கள் நடத்தினார். 'கண்டன நாள்' ஒன்று குறிப்பிட்டு, அடக்குமுறையைக் கண்டித்தார். பின்னர் நமது போராட்டத்திலே நாம் கணிசமான வெற்றியைப் பெற்று, விடுதலை பெற்றோம், சிறைச்சாலைகளிலேயிருந்து! அதன் பிறகு இரு கழகங்களும் தங்கள் தங்கள் வேலைகளை நாட்டிலே நடத்திக் கொண்டிருந்தன. ஆச்சாரியார் வீடு திரும்பினார்; காமராசர் வந்தார் அமைச்சராக! தமிழ்நாட்டு அரசியல் வானிலே எத்தனையோ குழப்பங்கள்—எத்தனையோ மின்வெட்டுகள்! திராவிட முன்னேற்றக் கழகம் தன் நிலையை உறுதிப் படுத்திக் கொண்டு, தனது வெற்றிப் பாதையிலே தங்கு தடையின்றி பயணம் நடத்தத் துவங்கியது! என்னதான் காமராசர் தமிழராயிருந்தாலும்—அவர் டில்லியின் ஏஜண்டு என்பதை தி. மு. கழகம் அறிவிக்கத் தவறியதில்லை. "பெரியாரின் முக மூடியைக் கிழித்தெறிகிறேன்" என்று அவர் முன்பு பேசியதையும்- "திராவிட எழுத்தாளர்களின் கட்டை விரல்களை வெட்டி எறிகிறேன்" என்று கடுமொழி கூறியதையும்—"சுயமரியாதைக் கழகங்களிலே செத்துப் போன இட்லர், முசோலினியின் ஆவிகள் உலவுகின்றன" என்று வசை மாரி பொழிந்ததையும்—தி. மு. கழகம் மறந்திடவில்லை. ஆகவேதான், "குலக் கொழுந்தே! குணாளா!—என அழைக்கிறோம்; அவரோ, டில்லியின் கட்டளைக்குக் காத்துக் கிடக்கிறார்" என்று மாயையில் சிக்கிய நண்பர்கள் அனைவருக்கும், நமது கூடாரத்திலே தப்பித் தவறி சிலர் இருந்தால்; அவர்களுக்கும் எச்சரிக்கை செய்தோம். அவர் ஒரு மாயைதான்-என்பதை தீண்டாமைச் சுவரொட்டிகளை திரும்பப் பெற்றாரே; அதன் மூலம் நிரூபிக்க முடிந்தது! இப்போது, மற்றொரு வாய்ப்பு கிடைத்து விட்டது—அதுவும் பெரியாரின் வாயிலாகவே நிரூபிப்பதற்கான அரிய வாய்ப்பு இதுவென்றே கூறலாம்.

ஆகஸ்டு முதல் நாள் பெரியாரின் திட்டப்படி நாடெங்கும் கொடி எரிப்புக் கிளர்ச்சி நடைபெற இருக்கிறது. பதினாயிரத்துக்குக் குறையாத தோழர்கள் கிளர்ச்சியிலே ஈடுபடுவார்கள் என்றும் விடுதலை ஏடு அறிவித்திருக்கிறது. 'தி. மு. கழகத்தின்மீது ஆச்சாரியார் அடக்குமுறையை அவிழ்த்து விட்டாரே; அதுபோலவே திராவிடர் கழகத்தின் மீது காமராஜரும் அடக்குமுறைக் கணைகளை வீசுவாரா?'

நாடு கேட்கிறது; காமராஜரைப் பார்த்து இப்படி! 'வீசுவார்—வீசாமலிருக்கமாட்டார்'—காங்கிரஸ் வட்டாரம் பேசுகிறது இதுபோல! 'அவர் என்ன செய்வார், பாபம்—டில்லியின் கட்டளையை நிறைவேற்ற வேண்டியவர்தானே'—என்றும் சில வட்டாரங்களிலே பேசப்படுகிறது.

குடியாத்தத்தை மறந்து விட்டா அந்தக் கோணல் வழியிலே நடப்பார்? பெரியாரே தேர்தல் பிரச்சாரம் நடத்தினாரே; அவருக்கு! காங்கிரஸ் கொடியின் கீழே நின்று திராவிடர் கழகத் தோழர்கள் காமராசருக்கு ஓட்டு கேட்டார்களே; அது மட்டுமேல்ல—காமராஜருக்கு மாத்திரமன்றி, உப தேர்தல்களிலே கூட காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு திராவிடர் கழகம் வெளிப் படையாக ஆதரவு கொடுத்திருக்கிறதே; இவ்வளவு இருந்தும் திராவிடர் கழகத்தின்மீது காமராசர் பாய்ந்திட எண்ணுவாரா? **மேலிடத்துக்குப் பணிந்து தீர வேண்டுமேயென்றால்—மந்திரிப் பதவியை வீசி எறிந்து விட்டு வெளியேறுவாரே தவிர, மனச் சாட்சியைக் கொன்று, நன்றியை மறந்து நின்றிட மாட்டார்.**

—'இப்படியும் யூகங்கள் உதயமாகின்றன; உணர்ச்சி வசத்தால் உரிமைக் கொடி உயர்த்தி இருப்போரின் வட்டாரங்களிலேயிருந்து!

காமராசரின் முக மூடி பரிபூரணமாகக் கிழித்தெறியப்பட வேண்டிய வேளை நெருங்கி விட்டது! இரண்டொரு நாட்கள்தான் இடையிலே இருக்கின்றன.

கொடி கொளுத்துவது தகாது! தேசத்தையே அவமதிப்பதாகும். அது நமது தேசத்தின் கொடி. அதிலே தீயிடுவதா?-என்றுபல காங்கிரஸ் நண்பர்கள் கனல் கக்கி வருகிறார்கள் என்பதையும் நாள் தோறும் ஏடுகள் தெரிவித்து வருகின்றன.

கொடி கொளுத்தப் போகிறது திராவிடர் கழகம்—கொடி கொளுத்துவது ஆகாது என்கின்றன எதிர்க் கட்சிகள்—கொடி கொளுத்துவதில் கலந்து கொள்வதில்லையென்று முடிவெடுத்திருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். இந்த மூன்று நிலைகளிலும் இருக்கிற வேறு பாட்டை உணரவேண்டும்.

கொடி கொளுத்தும் திராவிடர் கழகமும், கூடாது என்கிற எதிர்க் கட்சிகளும், கொடியைப் பொறுத்தவரையிலே முரண்பாடான கருத்துக்கள் கொண்டவை.

இந்திய தேசியக் கொடி, நமது நாட்டுக் கொடியல்ல; அது வடவர் ஆதிக்கக் கொடி என்கிறது திராவிடர் கழகம்.

கூடாது என்பவர்களோ; அது நமது கொடிதான் என்று வாதிடுபவர்கள். ஏனெனில், இந்தியா ஒருநாடு; அதிலே பிரிவினை கூடாது என்று "நங்கித்தனம்" செய்து வருகிற கட்சிக்காரர்கள் அவர்கள். ஆகவேதான் கொடி கொளுத்துவோருக்கும், கூடாது என்போருக்கும் இடையே முரண்பாடு இருக்கிறது என்கிறோம். அந்தக் கிளர்ச்சியிலே கலந்து கொள்ளாத நாமோ, கொடியைப் பற்றிய கருத்திலே, திராவிடர் கழகத்தின் கருத்துடையவர்கள் என்பது யாவரும் அறிந்ததே! அதாவது-**கொடி என்பது சாதாரண ஒரு துணி** என்ற பெரியாரின் கருத்தையல்ல; நாம் குறிப்பிடுவது! இந்திய தேசியக் கொடி, நமது கொடியல்ல என்ற கருத்துடையவர்கள்தான் நாமும் என்பதைத்தான் குறிப்பிடுகிறோம்.

இந்தியா ஒரு நாடல்ல; திராவிடம் என்ற ஒரு பெருநாட்டை அடக்கியாளும் வடவர் ஏகாதிபத்யம் வீழ்ந்திட வேண்டும்-என்ற விடுதலைப் படையிலே அணிவகுத்திருப்பவர்கள் நாம். டில்லியின்

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

## (தலையங்கம் தொடர்ச்சி)

ஆதிக்கத்தை அறிவிக்கும் அந்த அசோக சக்கரக் கொடியின் கீழே நாங்கள் வாழமாட்டோம்-என்று திராவிடர் கழகத்தாரைப் போலவே நாமும் கூறிவருகிறோம். அவர்களைவிட அதை அதிகமாகவே வலியுறுத்தி வருகிறோம் என்பதற்கு அடையாளமாகவேதான், திராவிட முன்னேற்றக் கழகம் தென்னகத்தை மீட்கப் பணியாற்றும் **அரசியல் கட்சி** என்பதையும் அறிவித்திருக்கிறோம்.

அது நம்முடைய கொடி அல்ல—அதற்குத் தலை வணங்க மாட்டோம்--என்ற எண்ணமுடைய தி. மு. கழகம், ஏன் எரிப்புக் கிளர்ச்சியிலே கலந்து கொள்ளக்கூடாது என்று கேட்கத்தான் தோன்றும்!

அதற்குத்தான் 'திராவிட நாடு' இதழிலே அண்ணு விளக்கம் தந்திருக்கிறார்.

"கொடி கொளுத்துவது போன்ற முறை மூலம், காங்கிரஸ்காரர்களுக்கும், திராவிட இயக்கத்துக்கும், நேசம் ஏற்படவே முடியாத ஒரு மோசமான சூழ்நிலை ஏற்பட்டுவிடும்; எனவே இந்தித் திணிப்பை எதிர்க்க வேறு முறையைக் கொள்வோம் என்று எடுத்துச் சொல்லியிருப்போம்; எங்களையும் அழைத்துக் கலந்து பேசியிருந்தால்!"

—என்பதாக அண்ணு அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

அண்ணுவின் இந்த விளக்கத்திற்குப் பதில் எழுதும் வகையிலே "விடுதலை"யிலே தலையங்கம் தீட்டப்பட்டிருக்கிறது, 27-7-55 அன்று!

"அப்படியானுல், இதுவரையிலே நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியிலும், ரயில் நிறுத்தக் கிளர்ச்சியிலும், ரயில் நிலையப் பெயர் மாற்றக் கிளர்ச்சியிலும், எத்தனை காங்கிரஸ்காரர்கள் கலந்து கொண்டார்கள்? அல்லது "அனுதாபம்" காட்டினர்?—என்று கேட்கிறோம்!"

—என்பதாக விடுதலை எழுதியிருக்கிறது.

**1938-ல்** நடத்தப்பட்ட இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியிலே தான், காங்கிரசின் தூண்களிலே ஒருவராயிருந்த **நாவலர் சோமசுந்தர பாரதியார்** அவர்கள் காங்கிரசைவிட்டு விலகி, தமிழர் பெரும்படையிலே சேர்ந்தார் என்பதை விடுதலையாருக்கு ஞாபகப்படுத்த வேண்டியதில்லை யென்று கருதுகிறோம்.

தி. மு. கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராக இருக்கும் தோழர் **என். வி. நடராசன்** அவர்கள், காங்கிரசிலே பணியாற்றிய முன்னணி வீரர் என்பதையும், சத்தியமூர்த்தியின் அன்புக்குப் பாத்திரமானவர் என்பதையும், "இந்திப் போர்" எனக் கேட்டதும் அவர் காங்கிரஸ் கதருடையைக் கழற்றி எறிந்துவிட்டு, தமிழரின் களத்திலே குதித்தவர் என்பதையும் விடுதலையார் மறந்திருக்க நியாயமில்லை.

கதருடை என்ன; காவி உடைகளேகூட களத்திலே கட்க மேந்தப் புறப்பட்டன; கமண்டலங்களை வீசி எறிந்துவிட்டு! **மறைமலை அடிகள், சுவாமி சண்முகானந்தா, ஈழத்து சிவானந்த அடிகள்**—இவர்கள் எல்லாம் இந்திப் போரிலே எப்படிக் குதித்திட முடிந்தது? விடுதலையார் மறந்து விட்டாரா? இன்னென்று கேட்கிறோம்; விடுதலையாரையல்ல; விடுதலை படிக்கும் நண்பர்களை! இன்றைய தினம் திராவிடர் இயக்கத்திலே சேர்ந்துள்ள தோழர்களில் பெரும்பாலோர், பிறந்தது முதல் இந்த இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் அல்லவே! பெரும்பாலும் தேசியத் தோழர்களாயிருந்து, நமது கொள்கைகளாலும், அந்தக் கொள்கைகளை நிறைவேற்ற நாம் கையாண்ட நல்ல முறைகளாலும் கவரப்பட்டு வந்தவர்கள்தானே! வந்தவர்கள் போதாது; வடநாட்டு ஆதிபத்தியத்தை எதிர்க்க இன்னும் பெரிய படை வேண்டும். வருக! வருக!-என அழைப்பதாகத்தான் நமது திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் என்பது தி. மு. கழகத்தின் கருத்து! அப்படித் தீட்டிய திட்டங்கள் வீண்போனதில்லை. தேசிய வட்டாரத்திலேயிருந்து மிகப் பலரை, திராவிட விடுதலைப் படைக்கு அழைத்து வந்திருக்கின்றன. தேசியக் கொடி என்பது காங்கிரஸ் கட்சியின் கொடி அல்ல! ஆனல் தென்னுட்டுக் காங்கிரஸ்காரர்கள் வடநாட்டையும் சேர்த்து நமது நாடு என்று கருதியிருக்கிறார்கள். அதன் விளைவாக இந்திய தேசியக் கொடி, தங்களால் காப்பாற்றப்பட வேண்டிய ஒரு புனிதச் சின்னம் என்று தவருகக் கருதி வருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள், இந்தி மொழித் திணிப்பையும் வெறுப்பவர்களாயிருக்கிறார்கள். திராவிடர் இயக்கத்தின் முன்னுள்ள தற்போதைய பிரச்சினையோ, இந்தித் திணிப்பைக் கண்டிப்பதாகும். அத்தகையக் கண்டனக் குரல் இன்னும் வலிவுள்ளதாக அமைய காங்கிரஸ்காரர்களும் கூட்டு சேருவதிலே தவறென்றுமில்லை. **தேர்தலின் போதெல்லாம் கூட்டு சேருவதைவிட, இந்தியை வெறுப்பதிலே கூட்டு சேருவது தவறு என்று யாரும் கூறமாட்டார்கள்.** அப்படிக் கூட்டு சேருகிறவர்களை. வரவொட்டாமல் மனம் நோகும்படி செய்து விடும், இந்தக் கொடி கொளுத்தும் திட்டம், என்று நாம் கருதுகிறோம்.

திராவிடர் கழகத்தோடு, காங்கிரசார் கூட்டு சேர்ந்து, இந்தியை விரட்ட அதிகம் கடமைப்பட்டிருக்கிருர்கள்; உதாரணம், குடியாத்தம் முதலிய உப தேர்தல்கள்!

"அசோ, காங்கிரஸ் தீரர்களே! காமராசர் சீடர்களே! என்ன சொல்லுகிறீர்கள்? எங்களிடமிருந்து பெற்ற உதவிக்கு எப்படி நன்றி காட்டப் போகிறீர்கள்? உங்களுக்கும் பிடிக்காத இந்தித் திணிப்பை கண்டிப்போம் வாரீர்!" என்று அவர்களைக் கூப்பிட்டுப் பார்த்து, அவர்களது நாணயத்தைப் புரிந்துகொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தை திராவிடர் கழகம் இழந்திருக்கத் தேவையில்லை யென்றுகூட சொல்ல ஆசைப்படுகிறோம். இந்த காரணங்களை வைத்துத்தான், கொடி கொளுத்துவது **இப்போது தேவையற்றது** என்ற கருத்தை எடுத்துரைக்கிறோமே தவிர, இந்திய தேசியக் கொடிக்குத் தலை வணங்கும் நோக்கத்தினுல் அல்ல!

இதைப் புரிந்தோ அல்லது புரியாமலோ, விடுதலை ஏடு, நம் மீது ஏசல் கணைகளை ஏவுகிறது.

"வீடு தீப்பற்றி எரியும்போது, கிழவர் தூக்க முடியாத தண்ணீர்க்குடத்தை தூக்கிக்கொண்டு, மற்றவரையும் அழைக்கிறார். இப்போது என்னை அழைக்கவில்லை; என் தம்பியைக் கூப்பிடுங்கள்; அவன் நன்ருக அணைப்பான் எனக் கேள்வி—அவனை அழைக்காவிட்டால் வரமாட்டான்-என்று சாவதானமாக உரையாடிக் கொண்டிருப்பது சரியா?"

என்று கேட்கிறது, 27-ந் தேதிய விடுதலை. வீடு தீப்பற்றி எரிகிறது என்கிறது! உண்மைதான்! தீயை அணைக்க திருச்சியிலே கமிட்டிக் கூட்டம் போட்டு யோசிக்க நேரமிருக்கிறதாம்; எம்மை ஏன் அழைக்கவில்லை யென்று நாம் கேட்பதற்கு பதில் சொல்ல மட்டும் நேரமில்லையாம்! தீ அணைப்பதற்கான திட்டத்தை பல மாத காலமாக ரகசியமாக வைத்திருந்து வெளியிடலாமாம்—அந்தப் பல மாதங்களிலே, ஒரு மாதம் எம்மிடம் கலந்து பேசி திட்டம் தயாரித்திருந்தால் நாங்களும் அந்த நல்ல திட்டத்தில் கலந்துகொண்டிருப்போமே; என்று கேட்டால் அப்போது மட்டும் பதில் சொல்ல நேரமில்லையாம்! தீ அணைக்க விரைகிறார்களாம். "என் தம்பியைக் கூப்பிடுங்கள்; அவன் நம்மைவிட நன்ருக அணைப்பான்" என்று சொல்லுகிறோமாம்; கேலி செய்கிறது விடுதலை!

அதே விடுதலை எழுதுகிறது; "தீயை அணைக்க பெரியார், **தூக்க முடியாத** தண்ணீர்க் குடத்தைத் தூக்கிக்கொண்டிருக்கிறார்" என்று!

யோசனை சொல்லமாட்டார்களா? **தூக்க முடியாத தண்ணீர்க் குடம்** பயன்படாது! தீ அணைக்கும் படைக்கு செய்தி தெரிவிப்பது நல்லது என்று யோசனை சொல்வது தவரு? 'தீ அணைக்கும் படைக்கு நான் அழைப்பு அனுப்ப முடியாது; அவர்களாக வந்தால் வரட்டும்' என்று தூக்க முடியாத குடத்தைத் தூக்கி நிற்கும் கிழவர் கூறினுல் தீ அணையுமா? விடுதலையார்தான் பதில் கூறவேண்டும்.

கொடி கொளுத்துவது இப்போது தேவையா—இல்லையா? அந்த வாதத்தைக்கூட விட்டு விடலாம். தி. மு. கழகத்தாரும், அந்தக் கிளர்ச்சியில் கலந்துகொள்ள வேண்டுமென்று நினைத்தால், அதற்குக் கிளர்ச்சி நடத்துவோர் என்ன செய்திருக்க வேண்டும்?

"**இந்தக் கிளர்ச்சியில் எல்லாக் கட்சித் தோழர்களும் கலந்துகொள்ள வேண்டுமென்று வேண்டி வருந்தி அழைக்கிறது.**" என்பதாக திருச்சி நிர்வாகக் கமிட்டியிலே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். விடுதலையில் வெளிவந்திருக்கிறது. அப்படி நிறைவேற்றப்பட்ட தீர்மானமாவது, தி. மு. கழகத்தின் தலைமை நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறதா? அப்படி அனுப்பப்பட்டிருந்தால்,

★ தொடர்ச்சி 7-ம் பக்கம்

# மாலை விலகுது! மாசு தெரியுது!

அன்புள்ள குமார்,

இந்த வாரம் அரசியல் வானைப் பார்த்தாயா? இத்தனை நாட்களும் படிந்திருந்த இருள் அகன்று ஒளி தெரிய ஆரம்பித்திருக்கிறது.

காமராசருக்கு திராவிட கழகம் சூட்டியிருந்த 'வானவில் ஆரம்' திடீரென்று மறைந்து விட்டது. போர் தொடுத்து விட்டார் பெரியார்!

எந்தக் காமராசரின் திருஉருவப் படத்தை பட்டி தொட்டிகளிலெல்லாம் திறந்து வைத்து, தித்திக்கும் மொழியிலே புகழுரைகளைச் சொரிந்தாரோ, அதே காமராசர்தான் வடக்கேயிருந்து வரும் உத்தரவைத் தலை மேல் தாங்கி, பெரியார் அவர்களின்கைகளிலே விலங்கு மாட்டப் போகிறார். பச்சைத் தமிழன் ஆட்சிக்கு போற்றி பாடிய தொண்டர்களுக்கு, அதே பச்சைத் தமிழனது பட்டாளம் தடியடிகளைப் பரிசாகத் தரப் போகிறது. சிறைச்சாலை திறக்கப் படலாம்; சித்ரவதைகள் அளிக்கப்படலாம்—இவைகளில் எது நடைபெறப் போகிறதோ, தெரியவில்லை.

காமராசர் ஆட்சியிலே இன்று போர் முரசம் கேட்கிறதே; அது திருச்சி பெரியார் மாளிகையிலிருந்து மட்டும் கிளம்பிய ஒலியல்ல! சென்னை தாழ்த்தப்பட்டோர் சம்மேளனமும் அவர் மீது ஆகஸ்ட் 1-ந் தேதியன்று படை மோதப் போகிறது.

காமராசரை எதிர்த்து தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம்!—இது எவ்வளவு பெரிய ஆச்சரியமான நிகழ்ச்சி பார்த்தாயா?

பரமேஸ்வரன் என்னும் பெயர் கொண்ட ஆதித்திராவிடரை அறநிலையப் பாதுகாப்புக்கு அமைச்சராக்கினர்.

கக்கனிடம் தமிழ்நாடு காங்கிரசை ஒப்புவித்து தாழ்த்தப்பட்டவர்களின் கரகோஷத்தைப் பெற்றார்.

'எவ்வளவு துணிவு பார்த்தாயா, காமராசருக்கு! சத்தியமூர்த்தி அய்யர் வீற்றிருந்த காங்கிரஸ் நாற்காலியிலே அரிஜனை அமர்த்தி வைத்து வானோங்கும் புகழுக்குப் பாத்திரமாகி விட்டாரே!'—இப்படியெல்லாம் தேசிய வட்டாரம் தெம்மாங்கு பாடியது!

ஆனால் இப்போது நிலைமை என்ன?

ஜூலை 24-ந்தேதி யன்று சென்னை மெமோரியல் கூடத்தில் கூடிய தமிழ்நாட்டு தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தோர், தங்களுக்குரிய சலுகைகள் சரியான வகையில் தரப்படவில்லையென்று சட்டசபையின் முன்னர் மறியல் செய்யப் போகிறார்களாம்!

அதுமட்டுமா? தங்கள் கோரிக்கைகள் கவனிக்கப்படாவிட்டால், 'தாழ்த்தப்பட்டவர்களின் தன்னிகரற்ற தளபதிகள்' என்று புகழப்பட்டார்களே, அந்த மந்திரிகளாம் காமராசருடைய வீட்டிற்கும், பரமேஸ்வரனுடைய வீட்டிற்கும் எதிராக 'சத்யாக்கிரகம்' செய்ய வேண்டுமென்றும் முடிவு செய்திருக்கிறார்கள்.

மாநாட்டிலே பேசிய ரத்னம் எம். எல். ஏ. காமராசர் ஆட்சியிலே தாழ்த்தப்பட்டோர் உடலில் இரத்தம் கக்கிக் கொண்டிருக்கும் இரணத்தையெல்லாம் எடுத்துக் காட்டியிருக்கிறார்!

''ஷெடியூல்டு' வகுப்பினருக்கு அவர்களுடைய மக்கட் தொகைக் கேற்ப அரசாங்க உத்யோகங்கள் தர வேண்டுமென்று இந்திய அரசியல் சட்டத்திலே எழுதப்பட்டிருந்தாலும் கூட, சென்னை அரசாங்கம் அந்த அளவுக்கு அவர்களை அரசாங்கப்பணியில் அமர்த்தவில்லை. அரிஜன உயர்வுக்காக உண்டாக்கப்பட்டிருக்கும் நிதிகூட சரியான வகையில்செலவழிக்கப்படவில்லை. அரிஜனங்களுக்கென்று பிரத்யேகமாக ஒதுக்கப்பட்டிருக்கும் கல்விச் சலுகைகள் கூட அரிஜனங்களல்லாத பிற்போக்கு வகுப்பினரால் அபகரித்துக்கொள்ளப்பட்டு விட்டன.......ஐந்தாண்டுத் திட்டம்கூட தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்துக்கும், சேரி அபிவிருத்திக்கும் உகந்தவகையில் கவனம் செலுத்தவில்லை''

—திறப்புவிழா ஆற்றிய ரத்தினம் இன்னும் வீரா வேசமாகப் பேசியிருக்கிறார்.

கக்கன் இருக்கிறார்; பரமேஸ்வரன் இருக்கிறார்; சிவசண்முகம் பிள்ளைக்கு உயர் பதவி கிடைத்திருக்கிறது.

—இவையெல்லாம் காமராசர் காலத்தில்தான்! இருந்தும் சென்னை மெமோரியல் மண்டபத்திலே ஏன், குமார், ஏமாற்றத்தின் எதிரொலி நம் காதுகளைத் துளைக்கிறது?

''தாழ்த்தப்பட்டவர்களுக்காக காமராசர் இவ்வளவு செய்தார்; அவ்வளவுசெய்தார்'' என்று எங்கு பார்த்தாலும் எக்காளம் ஊதினர்கள். ஆனால் எம். எல். ஏ. ரத்தினம் தாழ்த்தப்பட்டவர்கள் பெற்ற காயங்கள் ஒவ்வொன்றையும் பேச வைத்துவிட்டு, காமராசர் நாணுகிற அளவுக்குக் காறிய மாற்றுகிறாரே; இது எப்படி முடிந்தது?

144-தடை யுத்தரவு பிறப்பிக்கப்பட்டாலும், அதையும் மீறி மறியல் செய்யத் தயாராகி விட்டோம்-என்று மார்தட்டுகிறார்கள்.

மந்திரிமார்கள் செல்லுமிடமெல்லாம் கருப்புக் கொடி காட்டி வெறுப்பு தெரிவிப்போம்-என்று கண்ணீர் வடித்துச் சொல்லுகிறார்கள்.

ஏன் இந்த நிலைமை? இந்தச் சூழ்நிலை திடீரென்று உருவெடுப்பானேன்? — இப்படித் தானே நீ கேட்டு வியப்புக் கடலில் மூழ்குகிறாய்?




ஆமாம்; குமார்! எரிமலை திடீரென்றுதான் தணல் கக்கும். ஆனால் அதற்கு முன்பாகவே பூமியின் அடித் தளத்திலே பூசோள மாறுபாடுகள் உண்டாகின்றனவென்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

தமிழகத்திலே உருவாகியிருக்கும் எரிமலை இப்போது தீக்குழம்பை வாரி யிறைக்கிறதல்லவா? இது பலநாளைய கொந்தளிப்பின் விளைவுதான்.

காமராசருக்கும், பெரியாருக்கும் இடையே நிலவியிருந்த உறவு முறிந்துவிட்டது.

தாழ்த்தப்பட்டோர் போர்க் கொடி உயர்த்தியிருக்கிறார்கள்.

—இந்த இருவரும் இப்போது களத்திலே குதித்து விட்டார்கள்.

அன்புள்ள குமார்! இன்னொரு எரிமலையொன்று எஞ்சியிருக்கிறது — அதுவும் விரைவில் வெடிக்கத்தான்போகிறது!

அந்த மூன்றாவது எரிமலை எதுவென்று தெரிகிறதா, உனக்கு? வன்னிய குல மக்களைத்தான் அப்படிக் குறிப்பிடுகிறேன்.

கடலூரிலே கூடி கல்விச் சலுகை குறித்து வெடி மருந்தை அவர்கள் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். சேர்த்த மருந்தை பீரங்கிக்குள் திணித்து போர்க் களம் புக வேண்டிய காலமும் நெருங்கிக் கொண்டுதான் இருக்கிறது.

உண்மையிலேயே, குமார், நீ ஆச்சரியப்படுவாய், 'காமராசர் எவ்வளவு ஆதரவோடு அரசு கட்டில் ஏறினர்; எத்தனை பேர் ஆதரவுக் கரம் தந்து ஆலவட்டம் சுற்றினர்கள்; இருந்தும் இவ்வளவு எதிர்ப்பு எப்படி உருவாயிற்று?' என்று!

உண்மைதான் குமார்! நீ ஆச்சரியப் படுவதிலே தவறொன்றுமில்லை. காமராசர் பயணம் நடத்திய பாதை, அப்படி!

ஆச்சாரியார் கடைப்பிடித்த கொள்கை சாணக்கியம். காமராசர் கடைப்பிடிப்பதோ சாகசம்!—இரண்டுமே இருபதாம் நூற்றாண்டின் அரசியலுக்கு ஒத்து வராத ஏகாதிபத்ய முறைகள்!

எதிரிக்கு இன்னல்கள் பல விளைவித்து, அவனைத் துவளச் செய்துவிட்டு, பின்னர் தொண்டைக் குழியை நெறிப்பவர், ஆச்சாரியார்!

★ தொடர்ச்சி 8–ம் பக்கம்

# புதையல்

மு. கருணாநிதி

**சென்ற இதழில்....**

'துரை விடுதலையாக வேண்டுமென்றால், துக்காராம் தூக்கு மேடைக்குப் போய் ஆக வேண்டும்' என்றார் அம்பலம்.

'அய்யோ பாபம்; அப் பாவியாயிற்றே துக்காராம்- வேண்டாம்; வேறு வழி யோசனை செய்யுங்கள்' என்றாள் பரிமளா.

'வேறு வழி கிடையாது; உன் பிரிய காதலன் உயிர் பிழைக்க ஒரே வழி-நீ என் வார்த்தைகளைக் கேட்பது தான்!' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினார் அம்பலம்.

'சரி, சொல்லுங்கள்' என்று அவரது பேச்சைக் கேட்க ஆயத்தமானாள், பரிமளா.

## 33. மூன்றில் ஒன்று!

வெள்ளியம்பலம் குரலை சரிப்படுத்திக் கொண்டு, மெதுவாகவும் நிதானமாகவும் பேச ஆரம்பித்தார். சூதான திட்டங்களை வகுக்கும் யோசனைகள் ஒன்றன் பின் ஒன்றாக உருவாகிக் கொண்டிருந்த படியால் எங்கே தவறி வார்த்தைகள் வந்துவிடுமோ; என்ற பயத்தோடு அவர் பேச்சில் நிதானத்தை அளவுக்கு மீறி கடைப்பிடித்தார்.

"பரிமளா! இதை கவனமாகக் கேள்! போலிசாருக்கு பலமான தடயம் கிடைத்து விட்டது. வெட்டப்பட்டுக் கிடந்த கையை எங்கு கண்டுபிடித்தார்களோ; அந்த இடம் துரையின் வீடு என்பதால், துரை சாமான்யத்திலே மீள வழியே கிடையாது. துரையையும், மாயாண்டிக் கிழவரையும் ஜாமீனில் விடுதலை செய்து, பிறகு வழக்கிலிருந்தும் விடுதலை பெற வேண்டுமென்றால்—துக்காராமைக் காட்டிக் கொடுத்தே ஆகவேண்டும். நான் போலிசாரிடம் சென்று, துக்காராம் கொலை செய்ததை நேரில் பார்த்தேன் என்றும், கூறப் போகிறேன். அதற்கு நீயும் சாட்சி சொல்லியாக வேண்டும். அதை விட்டு, நீ துக்காராம் மீது அனுதாபம் காட்டினால் ஆபத்துத்தான் வந்துசேரும்" என்று பயமுறுத்தினார். பரிமளாவுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. மௌனமாக நின்றாள். "அய்யோ, பாவம் துக்காராம்!" என்று மனதிற்குள்ளே வருந்தினாள். "மௌனம் சம்மதத்திற்கு அடையாளம்! நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு, அம்பலம் புறப்பட்டார். தெருவிலே நின்ற ராமனைக் கூப்பிட்டு, "உள்ளே போய் அவர்களுக்கு வேண்டியதை கவனி ஜாக்கிரதை" என்றும் எச்சரித்து விட்டு போலிசாரை சந்திப்பதற்காக விரைந்தார்.

பரிமளாவின் மனமோ ஒரு நிலையில் இல்லை. துரையின் பெயரைச் சொல்லி, அம்பலத்திடம் ஆபத்தில் சிக்க வைக்கக் கூடாது என்பதற்காக துக்காராம் பெயரை உபயோகித்தாள். இப்போதோ, துக்காராமை இந்த பயங்கர சதித் திட்டத்திலிருந்து எப்படி விடுவிப்பது என்று புரியாமல் திகைத்தாள்.

பள்ளிக்குச் செல்லும்போது பட்டுக்கோட்டை தெருவிலே ஒரு நாள் துக்காராம் பரிமளாவிடம் அநாகரீக முறையிலே நடந்து கொண்டது உண்மை தான். அன்று முதல் அவன்மீது பரிமளாவுக்கு ஆத்திரம் ஏற்பட்டதும் ஆச்சரியமில்லைதான். அந்த ஆத்திரம் நாள்தோறும் வளர்வதற்குத் துக்காராமின் சேட்டைகள் காரணமாயிருந்தன என்பதையும் மறுக்க இயலாதுதான். ஏதோ அந்த ஆத்திரத்திலே, தானும் தன் காதலனும் தப்புவதற்காக அவனை காட்டிக் கொடுத்து விட்டாள். இப்போது அவன் மரண முகப்பிலே நிற்கிறான். அவனை அவள் விடுவித்தாக வேண்டும். அவனை விடுவிப்பதென்றால், தன் அத்தானை பற்றிய கவலையை மறக்க வேண்டும்.

கவலையை என்ன; அத்தானையே மறந்து தீர வேண்டிய நிலைமை வந்தாலும் வரலாம். பரிமளாவின் நெஞ்சம் குழப்பக் காடாயிற்று. துக்காராமின் மீது அவளுக்கு அனுதாபமும் அன்பும் உதயமாக அந்தக் குழப்பம் காரணமாகவும் ஆயிற்று. அவன் அசடு வழிய, அவளைப் பார்த்து சிரிக்கும் போதெல்லாம், அவனது தலைக்கு மேலே தொங்கிக் கொண்டிருக்கும் தூக்குக் கயிறை நினைத்துக் கொண்டு அவள் வேதனைப் பட ஆரம்பித்தாள்.

"பரிமளா!" என்று பல்லை இளித்துக் கொண்டு அவன் கூப்பிடும்போதுகூட, முதல் நாள் இரவு போல அவள் சிடுசிடு வென்று விழாமல், சாதாரணமாக, 'ஏன்?' என்று கேட்க ஆரம்பித்தாள். பரிமளாவின் பணிவையும், குழைவையும் கண்ட துக்காராமுக்கு மீண்டும் நம்பிக்கை நட்சத்திரம் தோன்றத் துவங்கியது. பொழுதுவிடிந்ததும், துக்காராமை ஏமாற்றுவதற்காக அவள் சொன்னாளே; "இரண்டுநாள் தவணை கொடுங்கள்; உங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முடியுமா — என்று யோசிக்கிறேன்" என்பதாக; அந்தத் தவணையை இன்றைக்கே முடித்துவிடுவாள் போலிருக்கிறது என்று எண்ணிஅவன் அகமகிழ்ந்தான். அவன் கேட்டதற்கெல்லாம் பரிமளா, படபடப்பின்றி பதில் கூறினாள். அவனோ மகிழ்ச்சியில் கூத்தாடிக் கொண்டிருந்தான். மாலை போட்டுக் கொண்டு நிற்கும் பலிக் கடாவைப் பார்ப்பது போல அவனை அவள் பார்த்தாள்.

அவர்களை விட்டுவிட்டு அவசரமாகப் புறப்பட்ட வெள்ளியம்பலம் போராவூரணி போலீஸ் ஸ்டேஷனை நோக்கிப் பயணமானார்.

போராவூரணி போலீஸ் ஸ்டேஷனில்தான் துரையும், மாயாண்டிக் கிழவரும் 'லாக்அப்'பில் வைக்கப் பட்டிருந்தார்கள். அவர்கள் மீது போலீசார், 'சார்ஜ் ஷீட்' பதிவு செய்வதற்கு முன்பாகவே வெள்ளியம்பலம் அங்கு போய்ச் சேர்ந்தார். போராவூரணி சப் இன்ஸ்பெக்டருக்கு வெள்ளியம்பலத்தைமுன்பே தெரியுமாதலால், வரவேற்று உபசரித்து "என்ன விசேஷம்?" என்று கேட்டார். "விஷேசமில்லாமல் வருவேனா" என்ற பீடிகையுடன் அம்பலம் ஆரம்பித்தார்.

"ஒரு கொலை கேஸ் விஷயமாக உங்களிடம் அவசரமாகப் பேச வந்தேன்" என்று அம்பலம் கூறியதும், சப் இன்ஸ்பெக்டர், பரபரப்புடன் அதை கவனித்தார். துரையும், மாயாண்டியும் 'லாக் அப்'பில் இருப்பது தனக்குத் தெரியாது போலவே அம்பலம் நடந்து கொண்டார்.

"புதுப்பட்டினத்திலே துரை என்பவனுடைய வீட்டுக்கு போயிருந்தேன் ஒரு காரியமாக. அப்போது ஒரு பெண் ஓடிவந்து வீட்டுக்குள்ளே புகுந்தாள். அவள் அலறிக் கொண்டு ஓடிவந்ததிலேயிருந்து, ஏதோ பெரிய ஆபத்து என்று நினைத்தேன். அவள் பின்னாலேயே ஒரு வாலிபன் ஓடி வந்தான். அவன் கையிலே பளபளப்பான ஒரு கத்தி இருந்தது. அதைக் கண்டதும் நானும் துரையும் வெளியே வந்து விட்டோம். 'ஐயோ! என்னைக் காப்பாத்துங்க!' என்று அந்தப் பெண் கத்தினாள். "சத்தம் போடாதே!" என்று அவளையும் அதட்டிவிட்டு, எங்களையும் பார்த்து, "உள்ளே வந்தால் உயிர் போகும்!" என்று மிரட்டினான். என்ன செய்வதென்று தெரியாமல் நாங்கள் விழித்தோம். "துக்காராம்! துக்காராம்! என்னை விட்டு விடு!" என்று அந்தப் பெண் கூச்சல் போட்டதிலேயிருந்து, அவன் பெயர் துக்காராம் என்றும், "பரிமளா! சத்தம் போடாதே!" என்று அவன் எச்சரிக்கை செய்ததிலேயிருந்து, அவள் பெயர் பரிமளா என்றும் புரிந்து கொண்டோம். அப்போது தாடி வைத்த முரட்டுச் சாமியார் ஒருவர் அங்கு ஓடிவந்தார். அவர் எங்களைப் பார்த்து, "அய்யா! இங்கே ஒரு பெண்ணை, ஒரு துஷ்டன் துரத்திக் கொண்டு வந்தானா?" என்று பரபரப்போடு கேட்டார். நாங்கள், 'ஆமாம்' என்று உள்ளே கை காட்டினோம். "அட பாவிகளே! அதை வேடிக்கையா பார்க்கிறீர்கள்?" என்று சாமியார் எங்களைத் திட்டி விட்டு உள்ளே ஓடினார். நாங்களும் உள்ளே ஓடினோம். அவருக்கும், அந்த துக்காராமுக்கும் கை கலப்பு ஏற்பட்டது. அந்த சமயத்தில் பரிமளா, அதை விட்டு வெளியே ஓடிவிட்டாள்."

சப் இன்ஸ்பெக்டர் பெருமூச்சுடன், "ஆமாம்; அப்போது தான் நாங்கள் அவளை தெருவிலே பார்த்தோம்" என்றார்.

"முழுதுங் கேளுங்கள்" என்று மீண்டும் தொடர்ந்தார் அம்பலம். "பரிமளா ஓடிவிட்ட பிறகும், சாமியாருக்கும் துக்காராமுக்கும் சண்டை ஓயவில்லை. திடீரென்று சாமியார் கொல்லைப் பக்கம் ஓடினார். துக்காராம் அவரைத் தொடர்ந்து சென்று, அரிவாளால் அவரது கையை வெட்டினான்—கை துண்டாகிக் கீழே விழுந்து துடித்தது! அதைப் பார்த்து பயந்த துரை, வீட்டை விட்டு எங்கேயோ ஓடிவிட்டான். அவ்வளவு பயங்கொள்ளி அவன். நான், தைரியமாகச் சென்று துக்காராமை இழுத்தெறிந்தேன். அவன் கையிலிருந்த கத்தியை ஓங்கினான்; நான் சமாளித்துக் கொண்டேன். அந்த சமயத்தில் கை வெட்டுண்ட சாமியார் ஓட்டம் பிடித்தார்.

"அவரைத் தொடர்ந்து அந்த இருட்டிலே துக்காராம் ஓடினான். நானும் என்ன நடக்கிறது என்று பார்க்கப் பின்னாலேயே ஓடினேன் அவர்கள் ஓடிய வழி தவறிவிட்டது. வேறு வழியில் நடந்து சென்ற நான், அங்கே பரிமளா ஓடிவருவதைக் கண்டேன். அவள் விபரமெல்லாம்சொன்னாள். அவள் எங்கள் ஊர் தாண்டவனின் மகள் என்று அப்போது தான் புரிந்து கொண்டேன். வீட்டிலே தூங்கிக் கொண்டிருந்த அவளுக்கு துக்காராம் மயக்க மருந்து கொடுத்து தூக்கி வந்ததாகவும், அவளைத் தன் இஷ்டத்துக்கு இணங்க வைக்க முயன்றதாகவும், அவளும் அவனிடமிருந்து தப்புவதற்கு தந்திரமாக நடந்து கொண்டதாகவும், கடைசியில் புதுப்பட்டினம் வழியாக இருவரும் செல்லும் போது, ஒரு சாமியார் இவர்களைப் பார்த்து சந்தேகப் பட்டு தன்னை மீட்க வந்ததாகவும், துக்காராம்—சாமியார் இருவரும் சச்சரவு செய்து கொண்டிருக்கும்போது அவள் திடீரென்று வீட்டுக்குள் நுழைந்ததாகவும் கூறினாள். பிறகு இருவரும் பேசிக் கொண்டே ஆற்றங்கரைப் பக்கமாக நடந்து வந்தோம். "ஐயோ! ஐயோ!" என்ற சப்தம் கேட்டது. இருவரும் ஒளிந்திருந்து பார்த்தோம். கையிழந்து தவிக்கும் சாமியாரை, துக்காராம் பெரிய கம்பு ஒன்றினால் அடித்துக் கொண்டிருந்தான்.

நான் அருகே ஓடலாமென்று நினைத்தேன். பரிமளா தடுத்துவிட்டாள். அடிபட்ட சாமியார் பிணமாக விழுந்தார். "பயலே! தொலைந்து போ! நான் ஒரு பெண்ணை அழைத்து வந்தால் உனக்கென்ன? நாயே!" என்று துக்காராம் சாமியாரை உதைத்து படுகுழியொன்றில் தள்ளினன். அதையும், நானும் பரிமளாவும் கவனித்தோம். பிறகு துக்காராம் அவசரமாக அதை விட்டு நகர்ந்தான். நான் பரிமளாவிடம் "நீ வீட்டுக்குப் போ; ஜாக்கிரதையாக!" என்றுகூறி விட்டு அவனைத் தொடர்ந்தேன். பொழுது விடிந்தது. அவன் மருங்கப்பள்ளம் பக்கமே வந்து கொண்டிருந்தான்.

"மீண்டும் அவளைத் தேடி வந்திருக்கிருன் போலிருக்கிறது!— இது தான் சமயமென்று அவனைப் பிடித்தேன். திமிறினன். விடவில்லை. துணைக்கு சில ஆட்கள் ஓடி வந்தனர். அவனைக் கொண்டு போய் என் வீட்டில் அடைத்து வைத்திருக்கிறேன். இப்போது வந்தால் நீங்கள் அந்தக் கொலைகாரனை கைது செய்யலாம். என் வீட்டிலேதானிருக்கிருன்" என்று கூறி முடித்தார், அம்பலம். சப் இன்ஸ்பெக்டரால் இந்தச் செய்திகளையும், விபரங்களையும் நம்பாமல் இருக்க முடியவில்லை.

"அப்படியா விஷயம்! நான் அந்த துரைமீதும் மாயாண்டி என்பவர் மீதும் சந்தேகப்பட்டு அவர்களைப் பிடித்து வைத்திருக்கிறேனே!" என்று தன்னை நொந்து கொண்டார் சப் இன்ஸ்பெக்டர்!

"ஐயோ! அவர்களையா? அடபாபமே!" என்று ஏதுமறியாதவர் போல எழுந்து குதித்தார் அம்பலம்.

"ஆமாம்; கையைக் கண்டு பிடித்த நாங்கள், கேசைக் கண்டு பிடிக்க முயன்ருேம். இன்று மத்தியானம்தான் துரையையும், மாயாண்டியையும் கைது செய்தோம்."

"எங்கே கைது செய்தீர்கள்?"

"அவர்கள் வீட்டிலேதான்!"

"அவர்கள் என்ன சொன்னுர்கள்?"

"எதுவும் கூறவில்லை; மௌனம் சாதிக்கிருர்கள். நானும் எதுவும் கட்டாயப்படுத்தி கேட்கவில்லை. 'லாக் அப்'பில் தானிருக்கிருர்கள். இன்னும் 'சார்ஜ் ஷீட்'டே போடவில்லை!"

"அய்யோ, அப்படியானல் அவர்களை விட்டுவிடுங்கள்! அவர்களை விடுதலை செய்துவிட்டு என்னேடு வாருங்கள்! உண்மையான கொலைகாரனை இப்போதே ஒப்புவிக்கிறேன்."

"ஆல் ரைட்! இப்போதே விடுவிக்கிறேன்"

துரையும், மாயாண்டிக் கிழவரும் விடுதலைசெய்யப்பட்டார்கள். வெள்ளியம்பலம், துரையை முன்பே தெரிந்தவர்போல, "என்ன தம்பீ! இப்படி மாட்டிக் கொண்டாய்? நான் வரலேன்னு அவ்வளவுதான்!" என்ருர்.

துரை, எதுவும் பதில் சொல்லாமலே நின்ருன். "என்னய்யா, மாயாண்டி! நீருமா சிக்கிவிட்டீர்; அட ப்பாபமே!" என்ருர் வெள்ளியம்பலம், கிழவரை நோக்கி! கிழவரும் தலைகுனிந்தவாறு எதையோ சிந்தித்துக் கொண்டு நின்ருர். வெள்ளியம்பலம், துரையையும் கிழவரையும் தனியே அழைத்துப் போய், துரையிடம், "எல்லாம் பிறகு பேசிக் கொள்வோம்— முதலில் நீங்கள் இதைவிட்டுப் போங்கள்! இந்தக் கேசில் நீ சாட்சியாக வரவேண்டியிருக்கும்; அவ்வளவுதான்! பரிமளா ஒரு பத்திரமான இடத்திலே வைக்கப்பட்டிருக்கிருள். நாளை இரவு பனிரெண்டு மணிக்கு, நீ மனேராவுக்கு வா! அங்கே பரிமளாவை உன்னிடம் ஒப்படைக்கிறேன்!" என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டு, சப் இன்ஸ்பெக்டரிடம் வந்து, "புறப்படலாம் சார்!" என்ருர். சப் இன்ஸ்பெக்டர், போலீஸ் ஜவான்கள் இரண்டு மூன்று பேரை அழைத்துக் கொண்டு அம்பலத்துடன் புறப்பட்டார்.

✱

துக்காராம் போலீஸ் கையில் சிக்கப் போகிருனே; என்ற ஏக்கத்தோடு பரிமளா உட்கார்ந்திருந்தாள். துக்காராமை விடுவிக்க வழியே கிடையாதா என்று எண்ணமிட்டாள். அவளது இளம் இதயத்திலே புயல் வேகமாக வீசத் தொடங்கியது. சிறையிலே கிடக்கும் அத்தான்! சிலந்தி வலையிலே சிக்கியிருக்கும் அப்பாவி துக்காராம்! இவர்கள் இருவரையும் விடுவிக்க வழி என்ன? கேள்விகள் வேதனைக் கணைகளாக மாறித் துளைத்தன. இப்படி ஒரு நெருக்கடியும் சோதனையும் மிகுந்த கட்டம் எந்தப் பெண்ணுக்கும் ஏற்பட்டிருக்க முடியாது என்று தனக்குள்ளே அழுதாள்.

"எவனே ஒருவன்; ஏனேதானே வென்று வாழ்ந்து கொண்டிருக்கும் இளிச்சவாயன்! அவனுக்காக, தன்னை உயிரினும் மேலாக நினைக்கும் அத்தானை பலி கொடுப்பதா? எத்தனை எத்தனை இன்பக் கனவுகள் — எத்தனை எத்தனை எதிர்காலத் திட்டங்கள்– அத்தனையும் அழிந்து போவதா?" –கேள்வி கிளம்பியது- பரிமளா மௌனமாக அழுதாள்.

"அத்தானவது, உயிரைத் துரும்பென மதிப்பவர்! இந்த அப்பாவியோ உயிரைக் கரும்பென எண்ணிக் கிடப்பவனுயிற்றே! அவன் சாக வேண்டிய அளவுக்கு அப்படியென்ன தவறு செய்துவிட்டான்? அவனைக் காட்டிக் கொடுப்பதால் அவளுக்கு என்ன லாபம்? காதலன் கிடைப்பான்- காதலில் வெல்வாள்! ஒரு அப்பாவியின் உயிரைக் காப்பாற்ற காதலைத்தான் தியாகம் செய்யக் கூடாதா?" – மீண்டும் கேள்வி துளைத்தது!

"அப்படியே துக்காராமைக் காட்டிக் கொடுத்து, துரையைக் காப்பாற்றிவிட்டாலும், துரைக்கு வெள்ளியம்பலத்தால் என்ன ஆபத்து காத்திருக்கிறதோ; யார் கண்டது?" – குழப்பம் பொங்கியெழுந்தது!

"சரியான சாட்சிகளின்றி அத்தானின்மீது குற்றம் நிரூபிக்கப்படாமல்கூட போகலாம்! அப்படி சாட்சியம் இருந்தாலும் அவருக்கு சிறை வாழ்வுதான் கிடைக்கும்— சில ஆண்டுகளுக்குப் பிறகு அவரைச் சேர வழியிருக்கிறது! ஆனல் துக்காராம் சிக்கினல், அவன் வாழ்வே துண்டிக்கப்பட்டுவிடுமே!"

பரிமளா தத்தளித்தாள்— கதியற்றவனைக் காப்பாற்றுவதா? காதலைத் தியாகம் செய்வதா? அல்லது காதலனுக்கு துரோகம் செய்வதா?

இந்த மூன்றில் ஒன்றை அவள் விரைவிலே முடிவு கட்டியாக வேண்டும். கடைசியில் காதலைத் தியாகம் செய்வது என்ற முடிவுக்கே வந்து சேர்ந்தாள்.

[ வளரும் ]

## (தலையங்கம் தொடர்ச்சி)

தி. மு. கழகத்தின் செயற்குழு உடனே கூடி, அதிகார பூர்வமான பதிலை திராவிடர் கழகத் தலைவருக்கு அனுப்ப வசதி ஏற்பட்டிருக்குமல்லவா? எப்படி தீர்மானத்தை அனுப்புவார்கள்? அவர்கள்தான் தி மு. கழகத்தை **ஒரு கட்சியாகவே அங்கீகரிக்கவில்லையே!** காங்கிரஸ், கம்யூனிஸ்டு, தமிழரசு ஆகிய எல்லாக் கட்சிகளும் தி. மு. கழகத்திற்கு நியாயமாகத் தரவேண்டிய மதிப்பை அளிக்கத் தவறவில்லை. திராவிடர் கழகமோ, சினிமாக் கட்சி கண்ணீர்த்துளிக் கட்சி என்று கிண்டல் செய்திடத் தவறியதே இல்லை. நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்பட வேண்டியதுதானே நியாயமும், அரசியல் தன்மையுமாகும்! நேருவுக்கும், ராஜேந்திர பிரசாத்துக்கும் ரிஜிஸ்டர் மூலம் தீர்மானம் அனுப்பப் படுகிறது; நெடுஞ்செழியனுக்கு அனுப்பப்படவில்லை! "கலந்துகொள்ள வேண்டிய" கழகத்திற்கு தீர்மானம் அனுப்பப்படவில்லை; சத்தி முனை காட்டி. காராக்கிரகத்தை திறந்துவிட எண்ணும் ஆதிபத்தியக் காவலர் இருவருக்கும் தீர்மானம் அனுப்பப் பட்டிருப்பதாக 'விடுதலை' அறிவிக்கிறது! இந்த நிலையிலே ஒரு அரசியல் கட்சி, மற்ருெரு கட்சியின் போராட்டத்திலே எங்ஙனம் கலந்திடுவது? அரசியல் அனுபவமுள்ளவர்கள் சிந்தித்திட வேண்டுகிருேம்.

52, ஆகஸ்டு மாதத்திலே, ரயில்வே நிலையங்களில் இந்தி அழிக்கும் போரிலே நீங்கள் கலந்துகொள்ளவில்லையா?—என்று கேட்கலாம்! **அந்தத் திட்டம், நமது கழகத்திற்கு உடன்பாடான திட்டம் என்பது மட்டுமல்ல;** அந்தத் தீர்மானத்தை நாம், **முன்பே கோயில்பட்டியிலே நிறைவேற்றியிருந்தோம்.** அதன் காரணமாகத்தான், அன்று ஆகஸ்டிலே போரில் கலந்துகொண்டோம். இல்லை; கலந்து கொண்டோம் என்று கூறமுடியாது; நாமும் ஒரு களம் சென்ருேம்—அவ்வளவுதான்!

தி. மு. கழகம் நடத்துகிற போராட்டங்களில் திராவிடர் கழகத்தார் கலந்துகொள்ளவில்லையென்று குறை கூறப்பட்டது கிடையாது. "அவரவர்களுக்கு அவரவர் போராட்டம் இருக்கிறது" என்று கூறிவிட்டு, பெரியார் நமது போராட்டங்களில் கலந்துகொள்ளாமலே இருந்துவிட்டார். ஆனல், நாமெல்லாம் அடக்குமுறைக்கு பலியானபோது, அய்யா அவர்கள் துடித்துப் போய், அடக்குமுறையைக் கண்டிக்க அணிவகுத்துக் கிளம்பினர். "தாறுடாவிடினும் தன் தசை ஆடுமல்லவா? அதோ எங்கள் தந்தை வந்துவிட்டார்!" என்று மகிழ்ந்தோம். அந்த மகிழ்ச்சி நமது ரணங்களிலே மருந்து பூசியதுபோலாயிற்று! கால் உடைந்து, கை முறிந்து, கண் இழந்து, மருத்துவ மனைகளில் கிடந்த நமது கழகத்துக் காளையரைப் பெரியார் சென்று பார்த்தார். சிறைச்சாலையிலேயிருந்து இந்தச் சேதி கேள்விப்பட்டு, சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்க்க "என்ன இருந்தாலும் எங்கள் பெரியார், பெரியார்தான்!" என்று பூரிப்படைந்தோம். கண்ணீர் விட்டோம் பெரியாரை நினைத்து; இரண்டாவது முறையாக! ஆனல் இது ஆனந்தக் கண்ணீர் என்றும் சொன்னேம்!

நமது போரிலே கலந்துகொள்ளவில்லை அவர்! ஆனலும் போருக்குப் பின்பு, தனது வீரக்கண்களிலே வெந்தணல் எழுப்பி, வெண்தாடி அசைய, வேதியர் ஆச்சாரியாரை வெகுண்டு நோக்கி, "அடக்குமுறையை வாபஸ் வாங்கு!" என்று விண்ணதிர, மண்ணதிர கூவினர்!

இதோ, அவர் களம் புகுந்திடும் காட்சி காண்கிருேம். நம்மையும் கலந்துகொண்டு போர்முறை வகுப்பார் என்று எண்ணியிருந்தோம். கூட இருந்து குடிகெடுப்போர் அந்தக் காரியம் நடைபெருமல் செய்துவிட்டனர். போர்முறை மாறிவிட்டது– நாம் கலந்துகொள்ளும் சூழ்நிலை அமையாமல் போய்விட்டது!

ஆயினும் என்ன; ஆதிபத்ய வடநாட்டு அரசின்மீதுள்ள வெறுப்பின் மேல் ஆணையாகக் கூறுகிருேம்;

"தந்தையே! தங்களின் பொன்மேனி, அடக்குமுறைக்கு ஆளானல்—வயதான காலத்திலே, "சிறையில் வாழு!" என்று காமராசர் ஆட்சி நன்றி மறந்து கட்டளையிட்டால்—எங்கள் சகோதரர்களாம்; ஒரே குடும்பத்து தோழர்கள்மீது ஆட்சியின் கொடுமையான அம்புகள் பாய்ந்தால்—அப்போது உங்கள் அன்புப் புதல்வர்களாகிய நாங்கள், பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம்!

படை புறப்படும்; தடை நொறுக்க! "தள்ளாத வயதுடைய எம் தந்தையை மீட்போம்—இல்லையேல் சாவு வரினும் ஏற்போம்! ஏற்போம்!" என எழுந்திடுவோம்! முரசு முழங்கிடுவோம்! இதில் சந்தேகத்திற்குச் சிறிதும் இடமில்லை! நிச்சயமாக இல்லை தந்தையே; நிச்சயமாக இல்லை!

★

# கம்யூனிஸ்டுகள்-அன்றும், இன்றும்!

நேதாஜி சுபாஷ் சந்திரர் ஒரு சத்த வீரர்! ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்க்க ஆயுதம் ஏந்திய அரசியல் மேதை! அவரது தீரச் செயல்களோ அரும்பெரும் காதை! அவர் கண்ட வழியே புரட்சிப் பாதை! அவர் தியாகி—திறல் மறவன்—தேச பக்தன்—தன்மானம் கொண்டோன்!

—ரஷ்யா இரண்டாவது உலகப் போரில் கலந்து கொள்வதற்கு முன்பு — கம்யூனிஸ்ட் தோழர்கள் கருத்து.

நேதாஜி சுபாஷ் சந்திரரா? நேர்மை வழி செல்லும் நேச நாடுகளை எதிர்ப்பவரா?

என்னே கொடுமை! என்னே கொலைபாதகம்!

நாஜிகளுடன் சேர்ந்து நமதருமை பிரிட்டனை எதிர்ப்பவரா தியாகி? இல்லை: இல்லை! அவர் கண்டது புரட்சிப் பாதையல்ல—போலிப் பாதை!

அவர் செய்தது தீரச் செயலல்ல—தேசத் துரோகம்! பச்சைத் துரோகம்!

—ரஷ்யா இரண்டாவது உலகப் போரில் குதித்த பிறகு!

✯

மா-சே-துங்கா? சீனாவிலே துள்ளிக் குதிக்கிறதே—அந்தப் பயமறியாப் பசுங் கன்று? அய்யோ, பாவம்! அனுபவமில்லா விளையாட்டுப் பிள்ளை—அவர் ஒரு பிற்போக்குவாதி!

—1948, கல்கத்தா மாநாட்டில்!

மா-சே-துங்தானே! அவர் நம்மவர்—சியாங்கே ஷேக்கை பார்மோசாவுக்குத் துரத்திய புலிக்குட்டி! எலியாய் வாழ்ந்த சீனத்து மக்களை சிங்க ஏறுகளாய் மாற்றிய செல்வம்!

பொதுவுடமை கண்ட புத்துலக சிற்பி! ஆசியாவிலே அமெரிக்க அணிவகுப்பை 'பிராக்கெட்' போட்டு, முற்றுப்புள்ளி வைத்த முயற்சியின் வடிவம்!

அவரால் கம்யூனிசம் கர்வத்தோடு நடைபோடுகிறது! அவர் ஒரு முற்போக்குவாதி!

—இன்று; கல்கத்தா மாநாட்டு மாயை அகன்றபின்!

✯

காளிதாசன்? 'சாகுந்தலம்' பாடிய புலவன்தானே! அவன் பூர்ஷுவா இலக்கியத்தின் தங்கக் கலசம்! அவனைப் புகழ்வது வெறும் தெகிடுதத்தம்—அவன் ஒரு பிற்போக்குக் கவிஞன்!

—ஹைதராபாத் கம்யூனிஸ்ட்கள், அன்று!

யார், நம்முடைய காளிதாசனா? கவின் ஒழுகும் நடையிலே கவிதை வரிகளை ஆக்கிய புலவர் மணியல்லவோ, அவன்!

அவன் மக்கள் கவிஞன்—முற்போக்குப் பாவலன்— ஜெய சூர்யா' ஒன்றே போதும், அவனுக்கு ஜெயபேரிகை கொட்ட!

—அவர்கள், இன்று!

கம்ப ராமாயணம்? கடவுள் கதையா, அது? வெறும் காலிக் கூத்து! கயவாளிக் கதை! உரக்கச் சொல்லுங்கள்—கம்பராமாயணம் ஒழிக!

—'ஜீவா'க்கள் சுயமரியாதை இயக்கத்தில் இருந்த போது!

ஸ்ரீமத் கம்ப ராமாயணமா? கடவுள் ரசம் சொட்டுகிறது-பக்த கோடிகளே! அதை அள்ளிப்பருகுவதற்கு ஓடோடி வாருங்கள்! உரக்கச் சொல்லுங்கள்-ரகுபதி ராகவ ராஜாராம்!

—இன்று!

ஜவகர்லால் நேருதானே—அவர் அடைகாத்து வெளியிட்ட வெளிநாட்டுக் கொள்கைதானே—அது வெறும் வேஷம்! 'நடுநிலைமை' என்பதெல்லாம் விவேகமற்ற கோஷம்!

காமன்வெல்த்திலே அங்கம் வகிப்பாராம்-'கிரெம்ளினோ'டும் காதல் செய்வாராம் — வேடிக்கை; வேடிக்கை! டாட்டாவோடு கை குலுக்குவாராம் — ரஷ்யாவோடும் கூட்டாளியாயிருப்பாராம்! — நம்மைக் குழந்தைகளென்று நினைத்துக் கொண்டு கதையளக்கிறார், கதை!

ஐசனோடு அளவளாவுகிறார் — அவர் அமெரிக்க அடிமை — வாஷிங்டன் வரவேற்புக் கொடுத்து விலைக்கு வாங்கிய செல்லப் பிள்ளை!

—மதுரை மாநாட்டிலும் அதற்கு முன்பும்!

அகோ! நேரு பிள்ளாய்! நிரன்றோ சோவியத்தின் நண்பன்! போர் சூழ்ந்த உலகத்துக்கு சோபிதம் தந்த சூரியன்! வெண்புறா வளர்க்கும் வேந்தன்! காந்தி மண்டலத்தின் காவலன்! யுத்த வெறியர்களைத் தஞ்சம் அடையச் செய்த பஞ்சசீலக் கொள்கையின் பர்த்தா! சமாதானம் காணும் வெளிநாட்டுக் கொள்கையின் கர்த்தா!

—மதுரை மாநாட்டிற்கும்-நேருவின் ரஷ்ய விஜயத்திற்கும் பின்பு!

—(ராமசாமி.)




## நூலேணி

### முசோலினி

வி. சிவப்பிரகாசம், பி. ஏ.

'வரலாற்றுப் புத்தகங்களைப் படித்து நேரத்தை வீணாக்காதீர்கள். வீரர்கள்; விவேகிகள்-ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றைப் படியுங்கள்'—என்பதாக டிஸ்ரேலி சொல்லி வைத்துப் போயிருக்கிறான். அந்த முறையிலே புகழ்வான் மேவும் பெரிய மனிதர்களின் வாழ்க்கைச் சரிதைகள் தமிழகத்துக்கு மிகவும் தேவை.

தோழர் சிவப்பிரகாசம் இந்தச் சிறு நூலில் முசோலினியின் வாழ்க்கையை மையமாக வைத்து பல தத்துவங்களைப் பின்னியுள்ளார்.

படிக்க வேண்டிய நூல்! சமுதாயத்தில் இனி முசோலினிகள் முளைக்காமலிருக்க இது போன்ற 'முசோலினி'கள்தான் வேண்டும்!

ஆசிரியர் முசோலினியின் வாழ்க்கைக் குறிப்புகளை அதிகமாகத் தந்திருந்தால் புத்தகம் இன்னும் விறுவிறுப்பாக இருந்திருக்கும்.

[வெளியீடு: நீலா நிலையம், 2-127, மவுண்ட் ரோட், சென்னை-6. விலை. ரூ. 0-10-0]

### DRAVIDIAN MOVEMENT —A RETROSPECT

By T. S. Thiruvengadan

அழகான ஆங்கிலத்தில் தோழர் திருவேங்கிடம் இந்தச் சிறு வெளியீட்டின் மூலம் திராவிடர் இயக்க வரலாற்றை நுணுக்கமாக வரைந்திருக்கிறார்.

நம்மை 'வகுப்புவாதிகள்' என்று வடநாட்டாரும், 'ஒரு வித கம்யூனிஸ்டுகள்' — என்று கடல் தாண்டிய அமெரிக்கரும் நினைத்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், அந்தப் பொல்லாதாரின் புனை கதையைப் போக்குவதற்கு இதுபோன்ற ஏடுகள் உலகப் பொது மொழியிலே தேவை; மிகமிகத் தேவை! நாம் பிறந்த கதையும், வளர்ந்த கதையும் மாற்றாரின் மயக்கம் தெளிவிக்கும் வகையில் சிறப்பாகத் தீட்டப்பட்டிருக்கிறது. வரவேற்க வேண்டிய முயற்சி.

[வெளியீடு: 7, புதுக்குளத் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-6. விலை ரூ. 0—4—0.]

### தமிழ்நாடு டைம்ஸ்

ஆசிரியர்: ராட்ஜர்ஸ், பி. காம்.

பெயரிலே இரு மொழிகள் இணைந்திருப்பதைப் போலவே, இந்த ஏடு ஆங்கிலத்திலும், தமிழிலுமாகக் கழகக் கருத்துக்களைத் தாங்கி, திங்களிரு முறையாக வெளிவருகிறது.

திராவிடரியக்க வாரத் தாள்களில் வந்துள்ள முக்கிய கட்டுரைகளின் பொழிப்புரையை ஆங்கிலத்திலே தருவது சுவையாக இருக்கிறது!

ஆணித்தரமான கருத்துக்கள்; அவசரக்காரர்களுக்கு அழகான பதில்கள்—இவை இந்த ஏட்டின் குறிப்பிடத் தக்க பகுதிகள்.

தோழர்கள் பி. எஸ். இளங்கோ, எம். ராட்ஜர்ஸ்-ஆகியோரின் இந்த முயற்சி வாகை சூட எங்கள் வாழ்த்துக்கள்!

விலை 1 அணா.

[அலுவலகம்: 187, மவுண்ட் ரோடு, சென்னை-2.]

### ஜெம்புலிங்கம் —ஜி. பால்துரை.

பிரபல கொள்ளைக்காரர் என்று சொல்லப்படும் ஜெம்புலிங்கம் அவர்களின் உண்மை வரலாற்றை அடிப்படையாக வைத்து இந்த நாடகம் தீட்டப்பட்டிருக்கிறது.

[வெளியிடு: ஆசிரியர், குறும்பலாப்பேரி, பாவூர் சத்திரம் பி.ஓ. திருநெல்வேலி மாவட்டம்-விலை ரூ. 0-12-0]

---

### பொன்முடியின் கடிதம்....

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் காமராசர் அப்படியல்ல! எதிரிக்குத் தாலாட்டுப் பாடி தூங்க வைத்துவிட்டு, தொடையிலே கயிறு திரிக்கும் மனப்பான்மை கொண்டவர்!

—இந்தச் சூது தெரிந்துதான் திராவிட முன்னேற்றக் கழகம் காமராசர் பட்டத்துக்கு வந்த அன்றே அறிவித்தது, அவரைப் பாராட்டுகிறோம்; ஆதரிக்கவில்லை என்று!

திராவிட முன்னேற்றக் கழகம் மாயையில் சிக்கவுமில்லை; பின்னர் மாயை விலகியதும் மாசு தெரிவதாகப் பறைசாற்றவுமில்லை. எனவேதான் குழப்பந்தரும் வெளிநாட்டுப் பிரச்னைகள் ஏதுமற்ற நாடு தன் கவனத்தையெல்லாம் உள்நாட்டை வளப்பம் செய்யும் திருப்பணியில் திருப்புவதைப் போல, நாங்கள் பாடிவீடுகளைப் புதுப்பித்து, படை வீரர்களுக்குப் பயிற்சி தந்து 'உள்நாட்டு வேலை'களைக் கவனித்து வருகிறோம்.

வணக்கம்.

அன்புள்ள,

பொன்முடி.




# ★ ஜெனீவாவிலே நடந்தது என்ன? ★

★★ இன்று உலகிலே போர் இல்லை; ஆனாலும் போர் வருமோ என்ற பீதி போரை விட அதிகமாகக் கவலை தருகிறது.

★ சமாதான மாநாடுகள் கூட்டி—சர்ச்சிலே பிரார்த்தனைகள் நடத்தி ஆக்ரமிப்பு உணர்ச்சி அணுவளவும் கிடையாது—என்று ஒவ்வொரு நாடும் போட்டி போட்டுக் கொண்டு சாதிக்க முனைகின்றன

★ ஐசன்துரை மாற்றுக் கூடாரத்துள்ளே இருப்போருக்குக் கைலாகு கொடுக்கிறார். புல்கானின் புன்சிரிப்புக் காட்டுகிறார். கிழவன் வாலிபப் பருவத்து சுவையான நினைவுகளுடன் புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதிப்பதைப் போல, ஒரு காலத்தில் பலமிக்க ஏகாதிபத்ய சக்தியாக இருந்து, இன்று இடிந்து போயிருக்கும் பிரிட்டனின் பிரதமர் ஈடன் கூடவே இருந்த ஒத்துழைப்புதருகிறார். பிரெஞ்சுப் பிரதமர் 'பாரே' யின் நல்லாதரவும் இருக்கிறது.

★ எல்லோரும் வெண்புறு வளர்ப்பு பற்றியும், வல்லூறு மனப்பான்மை ஒழிப்பு பற்றியும் பேசித் தீர்க்கிறார்கள். இருந்தாலும் உலகப் போர் ஒன்று அரும்பிவிடுமோ என்கிற அச்சம் எங்கும் நிலவுகிறது. ஏன் இந்தச் சூழ்நிலை?

★★ இரண்டாவது உலகப் போர் நடந்து கொண்டிருக்கும் போது—அப்போது அமெரிக்கா ஒதுங்கியிருந்தது!—முன்னறிவிப்பு ஏதுமின்றி திடீரென அமெரிக்காவுக்குச் சொந்தமான பேர்ல் துறைமுகத்திலே ஜப்பானிய விமானப் படை குண்டுமாரி பொழிந்து, கொலை பாதகச் செயலுக்கு நினைவுச் சின்னம் நிறுவியது.

★ பொய் காரணமொன்றுவது காட்டித்தான் போர் தொடுப்பார்கள். ஜப்பானோ வம்புச் சண்டை-அதுவும் திடீர்ச் சண்டை ஒன்றிற்கு துவக்க விழா செய்துவிட்டது.

★ இது அணுயுகம். ஒரு சில குண்டுகளாலேயே நாடு ஒன்றை நிர்மூலமாக்கிவிடும்போர்க் கருவிகள் மலையெனக் குவிக்கப் பட்டுவரும் காலம்.

★ அணுவெடி தயாரித்து விட்டதாக அமெரிக்காவிலே அறிக்கை வெளியானவுடனே ரஷ்யநாட்டுப் பாலைவனத்திலே அணுகுண்டு வெடித்த ஒலி நம் காதுகளுக்கு எட்டிவிட்டது.

★ அதற்குப் பின் அயிட்ரஜன் குண்டு என்றார்கள். அதுவும் இதோ — என்று கும்மாளம் போடுகிறது ரஷ்யா.

★ நாசக் கருவிகள் இரு முகாம்களிலும் தயாராகின்றன. ஒரு சில அயிட்ரஜன் குண்டுகளால் இங்கிலாந்துத்தீவை பூகோளப் படத்திலிருந்தே அழித்துவிடலாமென்று கணக்கு காட்டுகிறார்கள்!

★ இந்த நிலையில் எந்த முகாம் அணு ஆயுதங்களை எதிர்முகாம் மீது முதன் முதலாகப் பிரயோகிக்கிறதோ, அந்த நாட்டுக்குத் தான் இறுதி வெற்றி என்பதை எல்லோரும் உணர்கிறார்கள்.

★★ ஜப்பான் பேர்ல் துறை முகத்தை பிடி சாம்பலாக்கியதைப்போல எந்த முகாமும் முன்னறிவிப்பு ஏதுமின்றி பகைக் கூடாரத்தின் மீது அணு ஆயுதங்களைப் பொழியலாம்.

★ எந்தப் புற்றிலே எந்தப் பாம்பு இருக்கிறது என்று யாருக்குத் தெரியும்? அமெரிக்கா புற்றீசல் போல ஆயிரக் கணக்கில் இரவோடு இரவாக விமானங்களை அனுப்பி அயிட்ரஜன் குண்டுகளை ரஷ்யா மீது உபயோகிக்கலாம். இவையெல்லாம் மின்னல் வேகத்தில்-திடீரென்று நடைபெறுமேயானால் ரஷ்யா பிறகு எழுந்து நடமாட முடியாத நிலைமை ஏற்படலாம்.

★ இதே முறையில் ரஷ்யா தன் திடீர்த் தாக்குதலை துவங்குமானால் அமெரிக்கா அழிந்து விடும்.

★ 'பேர்ல் துறைமுகம்' எங்கு மறுபடியும் நடைபெற்றுவிடுமோ என்று இருதரப்பாரிடையே நிலவும் பயம்தான் இப்போது நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறதே. அந்த பீதி யுத்தத்திற்கு (கோல்டு வார்) மூலகாரணம்.

★★★ இந்த 'பீதியுத்த'த்தின் சூட்டைக் குறைப்பதற்குத் தான் சென்ற கிழமை 'ஜெனிவா மாநாடு' நடைபெற்றிருக்கிறது.

★ வல்லரசு மாநாட்டுத்தலைவர்கள் யால்டாவிற்குப் பிறகு முதன்முறையாகக் கூடினார்கள். ஜெர்மன் ஐக்கியம்; ஐரோப்பியப் பாதுகாப்பு; சுமுகமான போக்குவரத்துக்கும், வியாபார வளர்ச்சிக்கும் உள்ள தடைகளை நீக்குதல்; ஆயுதப் பரிகரணம்—ஆகிய பிரச்னைகளை விவாதத்துக்கு எடுத்துக் கொண்டார்கள்.

★ போரிலே புறமுதுகு கண்ட ஜெர்மனி மூன்று துண்டுகளாக்கப் பட்டிருக்கிறது. அமெரிக்கரின் பாவையாக ஒரு பகுதி; ரஷ்யர்களிடம் ஒரு பிரிவு; போலந்திடம் ஒரு துண்டு—சின்னாபின்னமாகி விட்டது, ஜெர்மனி.

★ ஹிட்லர் செய்த கொடுமைக்கு ஜெர்மானியர்களையா பழி வாங்குவது? இடையன் இழைத்த தவறுக்கு ஆடுகள் என்ன செய்யும்? எனவேதான் ஜெயபேரிகை தட்டியவர்களால் துண்டாடப் பட்டிருக்கும் ஜெர்மனியை ஐக்கியப் படுத்த வேண்டுமென்ற கோரிக்கை வல்லரசு மாநாட்டிலே முதலிடம் பெற்றிருக்கிறது.

★★ பல ஆண்டுகள் கழித்து; சூழ்ந்திருந்த மூடுபனி அனைத்தும் விலகி வழி விட்ட பிறகு; இரு முகாம்களின் மூலவர்கள் கூடினார்கள்.

ஜெனிவாவில் ஒரு சில நாட்கள் நடைபெற்ற மாநாடு காரணமாக எத்தனையோ நாட்களாக முடிவு காணப்படாமல் இருந்த பிரச்னைகளை வல்லரசுகள் தீர்த்து வைத்து விட முடியாது. ஜெனிவா மூலம் விலகியிருந்த 'பெரும் புள்ளிகள்' அருகருகே அமர்ந்து பேசும் நிலைமைதான் உருவாகியிருக்கிறது.

புல்கானின் பேய் போல இருப்பாரா? புன்முறுவல் பூப்பாரா?—என்று நினைத்துக் கொண்டிருந்த ஐசன்; 'ஐசன் எப்படியோ? இறுமாப்பும், இராணுவ மிடுக்கும் கொண்டவரோ?—என்று எண்ணிக் கொண்டிருந்த புல்கானின்—இருவருமே எதிருக்கெதிராக சந்தித்து சுமுகமான சூழ்நிலையை செப்பனிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

★★ வருகிற அக்டோபர் மாதத்திலே வல்லரசு நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் சந்திப்பார்களாம்! — இது ஜெனிவா மாநாடு வகுத்துக் கொடுத்த பாதை!

★★ ஒரு நாடு இன்னொரு நாட்டைவிட வலிமை மிக்கதாய் இருந்தால் அது எதிரியின் முகாமிற்கு வெண்புறுவை அனுப்பி வைக்காது. படைபலமிருப்பதால் செறுக்கித்திரியும்!

★★★ முத்தன் பயில்வான்; குப்பனோ பசுபோன்றவன்-பலமற்றவன்! முரட்டு முத்தனை குப்பன் சமாதானத்துக்கு அழைத்தால் அவன் இசைந்தா வருவான்? எட்டி உதைப்பான்! அடிமை கொள்ள நினைப்பான்!

ஆனால் முத்தனும், குப்பனும் ஒரே பலமுடையவர்களாயிருந்தால் மனதிற்குள்ளே புகைச்சல் இருந்தாலும் புன்முறுவல் காட்டி, ஒதுங்கிப் போவர்—கோதாவில் குதித்தால் யார் முதுகில் மண்படுமோ என்ற பயமும், பீதியும் இருவர் மனத்திலும் குடியேறியிருக்கிற காரணத்தால்!

★★ இதே நிலைமைதான் இப்போது 'இரு முகாம்'களிடையேயும் நிலவுகிறது!

ரஷ்யாவும், அமெரிக்காவும் ஏறத்தாழ ஒரே நிலையில் இருக்கின்றன. படைபலமென்னும் தராசுத் தட்டுகள் இரண்டும் சமநிலையில் நிற்கும் போதுதான் ஜெனிவா மாநாடுகள் தேவைப்படுகின்றன.

★★ துலாக்கோல் தட்டுகள் நிலை பிறழாமல் இருக்க, இரு முகாம்களில் எந்த முகாமின் படைபலமும் அடுத்த முகாமின் படைபலத்தை மிஞ்சுவதாய் இருக்கக் கூடாது.

அதற்காகத்தான் ஆயுதக் குறைப்பு வல்லரசு நாடுகளின் முக்கியப் பிரச்னையாகக் கருதப் படுகிறது!

★★ ஆனால் ஒன்று! அழகான ஓவியமொன்றை தீட்டுவதில் முனைந்த கலைஞன் திரைச் சீலையின் பின்பக்கத்திலே கரையான் குடிவந்திருப்பதைக் கவனித்துத்தான் தீரவேண்டும்!

ஐரோப்பியப் பிரச்னைகளில் காலம்கழித்த வல்லரசு மாநாடு ஆசியாவை மறந்துவிட்டது!

★★ சிவப்பாகிவிட்ட சீனவுக்கு ஐ. நா. விலே இடம் கிடையாது!

குயில் கூவவேண்டிய சோலையிலே கோட்டானை அமர்த்தி வைத்திருப்பதைப் போல, அங்கே சியாங்கே ஷேக்கின் பிரதிநிதிக்கு சிம்மாசனம் தந்து உட்கார வைத்திருக்கிறார்கள்.

★★ வியட்நாமிலே காலிகளின் கும்பல் மீண்டும் தகராறு கிளப்பியிருக்கிறார்கள்!

—இந்தப் பிரச்னைகளை ஆராயாமல்விட்டது, ஜெனிவா மாநாட்டிலே பெரியதொரு குறையை ஏற்படுத்திவிட்டது!

★★★ "ஆமாம்; இத்தகைய பெருமதிப்பும், பூரிப்பும்பெறத் தக்க மாநாட்டிற்கு அடிகோலியது யார்?" — இந்தக் கேள்வி சிலருக்குத் தோன்றுவது இயற்கைதான்!

"நேருவின் ரஷ்யவிஜயம்தான் இதற்குக் காரணம்" — என்று இடுக்கோடு இடுக்காகக் கூறுவோரும் இருக்கின்றனர்.

"நாடு சுற்றி நலம் விசாரிக்கும் கிருஷ்ணமேனனுடைய சாமர்த்தியத்தால் ஜெனிவா சந்திப்பு நடைபெற்றது" என்று பெருமை பேசுகிறார்கள் சிலர்.

★★ இவை இரண்டுமே அல்ல உண்மைக் காரணங்கள். பொதுவாகவே மீண்டுமொரு போர் வந்தால் உலகமே புதைந்து விடுமென்ற நம்பிக்கை இப்போது உதயமாகியிருக்கிறது.

○ தொடர்ச்சி 12-ம் பக்கம்




உழைப்பே என்னுயிர் களைப்பே யின்றி
உழுவேன் நடுவேன் உறுகளை எடுப்பேன்
கண்ணெனக் காத்துக் கதிர்முற் றியபின்
அறுப்பேன் சுமப்பேன் ஆண்டை வீட்டில்
நிறைப்பேன் மகிழ்வேன் நிலத்தவர் மகிழ்வார்
இல்லம் செல்வேன் என்மனை யாட்டி
எலும்புடன் தோலாய் இருக்கும் பிள்ளையை
அடித்திடல் கண்டதும் 'அடித்ததேன்?' என்பேன்
"சோறு சோறெனச் சொல்லி அழுதால்
சோற்றுக் கெங்கே போவது? சொல்வீர்"
என்பாள் வல்லிடி இதயம் பாயும்;
களஞ்சியம் நிறைத்தோம் கஞ்சி இல்லை;
காலம் வருமெனக் கலங்கி இருந்தேன்;
இவ்வகை வாழ்நாள் இயங்க ஓர்நாள்
நோயுற் றுடலம் நொந்தேன் பின்னர்த்
தொடர்ந்தது நோய்தான் தொல்லைகள் உற்றேன்
உள்ளூர் மருத்துவர் உரைத்த மருந்துகள்
உண்டேன் பயனிலை; ஒருவர் வந்தார்
"நகரம் சென்றால் நன்மை பெறலாம்"
என்றனர் என்பால் இருப்பே இல்லை
உழன்றேன் உழன்றேன் உற்றார் ஒருவர்
பார்க்க வந்தார் "பகவான் காப்பார்
திருப்பதி சென்று தீர்த்தம் ஆடி
முடிஎடுப் பேனென முடிவுசெய் தால்நோய்
விலகும்" என்று விளம்பினர்; கையில்
இல்லை யாயினும் என்னுயிர் வேட்கையால்
வேண்டிக் கொண்டேன் விரைந்தன சின்னாள்;
ஓய்ந்தது நோயும் உழைத்துழைத் தில்லாள்
ஊட்ட ஊட்ட உடலுரம் பெற்றேன்;
உற்றார் சொன்ன உரைதவ றாமல்
காளைகள் காட்டிக் கடன்பணம் பெற்றுத்
திருப்பதி சென்றேன் திருவருள் பெறவே;
அருச்சனை செய்யவும் முடிஎடுப் பதற்கும்
இரண்டு சீட்டுகள் ஈந்தனர் அவற்றை
அன்பாய்ப் பணிவாய் அருச்சகர்க் களித்தேன்
இரண்டில் ஒன்றை என்கையிற் கொடுத்து
"முடிஎடுக்க அங்கே முதலிற் செல்வாய்"
என்றார் நாவிதர் இருக்கும் இடத்தைச்
சுட்டிக் காட்டச் சுருக்கெனச் சொன்னேன்
"நாவிதர் எடுக்கவா நானிங்கு வந்தேன்?
உள்ளூர் நாவிதர் உண்டு பலபேர்
அவரை ஒதுக்கி ஆண்டவன் தனக்கே
வைத்துளேன் முடியை வம்புசெய் யாமல்
நீரே எடுத்தருள் புரிவதே நேர்மை"
என்றேன் அருச்சகர் எரிந்து விழுந்தார்
"அற்பனே இவ்விடம் அருச்சனை மட்டும்
நடத்துவோம் நடத்திடு அங்கே" என்றார்
"அருச்சனை மட்டும் ஆண்டவர் ஏற்பார்
முடிநீர் எடுத்தால் முகஞ்சுளிப் பாரோ?"
என்றேன் அங்கே இருந்த பட்டை
நாமம் போட்டவர் "நாயே பேயே"
என்றெலாம் பேசி இடித்தார் அடித்தார்
"ஐயா என்னை அடிக்க வேண்டாம்
உயர்ந்த சாதியை உவப்பார் கடவுள்
நாவிதன் தாழ்ந்தவன் நயவார் அவனை
என்றதால் இவரை என்முடி எடுக்க
வேண்டினேன் தவறோ விளம்புவீர்?" என்றேன்
"பட்டிக் காட்டான் பட்டிக் காட்டான்"
என்றெனை இகழ்ந்தார் அங்கிருந் தோரே.

## ஒட்டுங்கள்....

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

துடைக்காமல் இருப்பதில்லை—என்று கடுஞ் சபதம் ஏற்றுக் கொண்டிருப்பவர்கள்! கொதித்துக் கிளம்புங்கள் — தலைமைக் கழகம் அனுப்பியுள்ள தீண்டாமைச் சுவரொட்டிகளை பட்டி தொட்டிகளிலெல்லாம் ஒட்டுங்கள்—பார்ப்பனியம் அதைக் கண்டு பதைபதைக்கட்டும்!

நாலு பேர் பார்வை படும் இடத்திலெல்லாம் ஒட்டுங்கள்; நாடாளும் காமராசருடைய கண்கள் எங்கு சுற்றினாலும் அங்கெல்லாம் நம் சுவரொட்டிகள் அவருடைய தொடை நடுங்கும் தன்மையைச் சுட்டிக் காட்டட்டும்! அதைப் பார்த்து 'இந்து'வும், 'மித்திர'னும் ஒப்பாரி வைக்கட்டும்!

ஆரிய மாயை சூழ்ந்திருக்கும் சேரிகளிலெல்லாம் ஒட்டுங்கள்! ஆரியத் திமிர் விளையும் அக்ரகாரத்துச் சுவர்களிலே ஒட்டுங்கள்! அடக்கமின்றித் திரியும் ஆரியம் அடங்க ஒட்டுங்கள்! தெளிவற்ற தன்மையால் தேசிய முகாமிலிருக்கும் தோழர்கள் 'தமிழ் உணர்வு எங்கு இருக்கிறது?'—என்று தெரிந்து திருந்துகிற அளவுக்கு ஒட்டுங்கள்! ஒட்டுங்கள்! காமராசர் ஏற்படுத்திய களங்கம் மறைகிற அளவுக்கு, கழகக் காளைகளே, இன உணர்ச்சிச் சுவரொட்டிகளை எங்கு பார்த்தாலும் ஒட்டுங்கள்!

★

## பிறைவானம்....

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

தது–விளக்குக் கம்பம் தெரிந்தது—செங்கல் அடுக்கப்பட்டிருந்தது—தோட்டமும் இருந்தது—உள்ளே சென்றேன்; தேடினேன். அந்த அம்மாவைக் காணோம்; அந்தச் சிறுவனின் தங்கையையும் காணோம். பரபரப்புடன் தேடினேன், அப்போது.

"யாரது?" என்று குரல் கேட்டது. பழக்கமான குரல்தான்; திரும்பினேன்; பார்த்தேன்; திடுக்கிட்டேன்; ஏகாம்பரம் நின்று கொண்டிருந்தான்! ஆமாம்; அது வலைப் பையன்தான்!

"நீ எங்கேயப்பா வந்தாய்?... இங்கே ஒரு அம்மா..."

நான் முடிக்கவில்லை. "சார்... மன்னிச்சுடுங்கோ சார். இது என் வீடுதான்! நீங்க தேடி வந்த அம்மா இங்குமில்லே; எங்குமில்லே; சும்மா கதை சார் அது. எனக்கு ரொம்ப நாளா கதை எழுதணும்னு ஆசை சார்......எழுதின நல்லா அமையுமா என்ற பயமும் உண்டு. இப்போ அதற்காக ஒரு பரீட்சை நடத்தினேன்......நீங்களே என் கதையை நம்பி.........தப்பு என் ளுடைதான் சார்!" என்றான். பயந்தபடியே நின்றான்.

எனக்கு சிரிப்பு வந்தது. "இது கதையல்ல தம்பீ; இதைப்போல ஆயிரம் சம்பவங்கள் நடக்கின்றன" என்று சொன்னேன். அந்தக் 'குட்டி எழுத்தாளனை'ப் போற்றினேன். டைரியை அவனிடமே திருப்பிக் கொடுத்தேன். நானும் திரும்பி நடந்தேன்.

—சொர்ணம்

## கொள்கை வளருது கோபுரம் போலே!

### வ. ஆ. மாவட்ட கிளைக் கழக செயலாளர்கட்கு

"தி. மு. கழக மாநில மாநாட்டு நிதிக்கு, சிற்றூர் கிளைக் கழகங்கள் ரூ. 20, பேரூர் கழகங்கள் ரூ. 50, நகர கழகங்கள் ரூ. 100 அளிக்க வேண்டுமென்றும், அண்ணா அவர்களை அழைக்க விரும்புகின்ற நகர கழகங்கள் ரூ. 200, மற்ற கழகங்கள் ரூ. 100 அளிக்க வேண்டுமென்றும் திருவண்ணாமலையில் கூடிய வ. ஆ. மாவட்ட தி. மு. கழகம் தீர்மானித்துள்ளது.

"அண்ணா அவர்களை அழைக்க விரும்புகின்ற கழகங்கள் 5—8—55-க்குள் செயலாளர் முகவரிக்கு தகவல் அளிக்க வேண்டுகின்றேன். உடனடியாக செயலாளர்கள் நிதி வசூலில் ஈடுபட்டு, நமது மாவட்ட கோட்டாவை பூர்த்தி செய்யுமாறும் வேண்டுகின்றேன். நிதி வசூலை செயலாளர் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்."—

என்று, வடாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி அறிவிக்கிறார்.

### பொதுக் கூட்டங்கள்

**சென்னை** (சைதாபேட்டை)

30-7-55 சனி மாலை 6 மணிக்கு, தோழர் செங்குட்டுவன் அவர்கள் தலைமையில், தோழர்கள் சி. பி. சிற்றரசு, கவிஞர் கண்ணதாசன்—ஆகியோர் பேசுவர்.

**சென்னை**

30-7-55 சனி மாலை 5-30 மணிக்கு, சென்னை இளைஞர் முன்னேற்ற மன்ற சார்பில், வண்ணை கல்லறை மைதானத்தில், தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் தலைமையில், தோழர்கள் டி. கே. சீனிவாசன், இளம்பரிதி, மு. பெருமாள்—ஆகியோர் பேசுவர்.

**திருச்சி**

31-7-55 ஞாயிறு மாலை 6 மணிக்கு, திருச்சி மலைக்கோட்டை மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில், அரசமரத் தெருவில் 'திருவள்ளுவர் வார விழா' பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் எம். எஸ். கந்தசாமி அவர்கள் தலைமையில், தோழர்கள் க. அன்பழகன், அம்பில் தருமலிங்கம்—ஆகியோர் பேசுவர்.

**சிதம்பரம்** (நாடகம்)

31-7-55 ஞாயிறு இரவு 9 மணிக்கு, சிதம்பரம் திராவிட இளைஞர் முன்னேற்ற படிப்பக வளர்ச்சி நிதிக்காகவும், மாநாட்டு நிதிக்காகவும், சிதம்பரம் டவுன் ஹால் மைதானத்தில், அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் 'பரப்பிரம்மம்' நாடகம் நடைபெறும்.

**மகாபாரதம்-**
**அடுத்த**
**இதழில்**

# பிறை வானம்



## ..பிள்ளைகள் பகுதி...

"சார், இதைக் கொஞ்சம் பாருங்கள்" என்ற குரல் கேட்டது. ஏதோ ஒரு புத்தகத்தில் மூழ்கிக் கிடந்த நான், திரும்பிப் பார்த்தேன்.

எதிரே அலுவலகப் பையன் ஏகாம்பரம் நின்றுகொண்டிருந்தான். அவன் கையில் இருந்த பொருளை கவனித்தேன். அது ஒரு டைரி; அழகான அட்டையுடன் கூடிய சின்னஞ்சிறிய டைரி! நான் அதை அவனிடமிருந்து வாங்கினேன். "இது யாருடையது?" என்று கேட்டேன்.

"அலுவலகத்துக்கு வரும் போது வழியில் கிடந்தது. சாலையோரத்தில் கிடைத்ததை யாருடையது என்று எப்படி சார் சொல்லமுடியும்?"—அவன் வழக்கமான சிரிப்போடு — பதிலோடு ஒரு கேள்வியையும் கேட்டு வைத்தான்; சிரித்தபடியே நகர்ந்தான்.

'பாவம்! யாரேனும் தவறி விட்டிருப்பார்கள் போலும்' என்று முணகியபடியே டைரியைப் பிரித்தேன், நான். மாற்றாரின் தினக் குறிப்பைத் தொடுவதும் தவறு தான்; ஆனால் உரியவரிடம் சேர்ப்பிக்க அதனுள் முகவரி கிடைக்கலாமல்லவா?

நான் புரட்டினேன். ஏதோ ஒரு பக்கத்தில் செந்நிற எழுத்துக்கள் தோன்றின. கண்களிலே 'பளிச்' சென்று பட்டது அப்பக்கம். படித்தேன்.

"நான் போகிறேன்! இல்லை; இல்லை — ஓடுகிறேன்! எங்கே ஓடுகிறேன்? நான் அறியேன்! ஏன் ஓடுகிறேன்? எதைத் தேடி ஓடுகிறேன்? உழைத்துப் பிழைக்க — அதற்கு இடந்தேடி ஓடுகிறேன்! அம்மா!... அம்மா!... நான் வரும்வரை காத்திருங்கள்; செத்துவிடாதீர்கள்! என் தங்கத் தங்கையையும் கொன்றுவிடாதீர்கள்!"

'என்ன இது? ஒன்றுமே புரியவில்லையே!' என்று உதட்டைப் பிதுக்கிவிடாதீர்கள். இப்படித்தான் நானும் முதலில் எண்ணினேன். ஆனால்... அந்த செந்நிற எழுத்துக்களுக்கு முன்னால் உள்ள பக்கங்களைப் படித்த பிறகு நான் துடித்தேவிட்டேன். அப்பப்பா! என்ன சோகம்; எத்தனை வேதனை; இப்படியும் இருக்குமா ஒரு வாழ்வு! நீங்களும்தான் கேளுங்களேன்; இதோ, டைரி பேசுகிறது:

★

"நான் ஏன் பிறந்தேன்?"—இந்தக் கேள்வி என் மனதிலே பல முறை கிளம்பியிருக்கிறது. 'ஏன்? இது என்ன கேள்வி? ஏடு தூக்கிப் பயில; பின் நாடு போற்றும் மேதையாக! புரிகிறதா?' என்று பதில் சொல்லிவிடாதீர்கள், 'சடக்' கென்று. அடுத்த பக்கங்களில் இருக்கும் இந்த ஏழையின் கதையைப் படித்தால், 'ஏனப்பா நீ பிறந்து தொலைந்தாய்?' என்றுதான் நீங்களும் கேட்பீர்கள், கவலையோடு—கலக்கத்தோடு!

நான் யார் தெரியுமா? ஒரு சிறுவன்; ஊராரின் மானம் காக்கும் பரம்பரையிலே பிறந்தவன். ஆமாம்; உடல் மறைக்கப் பயன்படுகிறதே துணி, அதை நெய்து தரும் கைத்தறியாளர்தான் என் அப்பா – அவருக்கு அப்பா – இன்னும் அவருக்கு முன்னோரெல்லாம்.

முற்காலத்தில் எங்கள் தொழிலுக்கு சிறப்பு இருந்ததாம்; ஆகவே எங்கள் முகங்களில் எல்லாம் சிரிப்பு இருந்தது. ஆனால் இப்போது... மானம் காத்த எங்களுக்கோ, வாழ்வைக் காக்க வழியைக் காணோம்! ஆமாம்; 'இயந்திர அரக்கன்' எங்களுடன் போட்டிக்கு வந்துவிட்டான்! நெய்த துணிகள் எங்கேயோ மூலையில் ஒதுக்கப்பட்டு விட்டன. வாங்குவார் யாருமில்லை; 'கபகப' என்று எரிந்த எங்கள் வயிற்றுப் பசி தணியவும் வழியில்லை. என்ன செய்வது?

படை புறப்பட்டோம். இயந்திரத்தோடு போருக்கல்ல; பிச்சை எடுக்க! 'பட்டினிப் படை' என்று பக்கம் பக்கமாக எழுதின, பத்திரிகைகள். பலனேதுமில்லை.

நான்-என் அப்பா–அம்மா-ஒரே அன்புத் தங்கை–இந்த நால்வரும் புறப்பட்டோம். கால்நடையாக நடந்தோம். பயங்கரப் பட்டினி-நீண்ட பயணம்! தட்டுத் தடுமாறி –தள்ளாடித் தவழ்ந்து சென்னையை வந்தடைந்தோம்.

சீமான்கள் வாழும் இடமல்லவா; சிற்றெறும்புகளாகத் தோன்றியிருப்போம் அவர்களின் கண்களுக்கு. எங்களை ஏறெடுத்துப் பார்ப்பார் யாருமில்லை.

## கதையல்ல....!

★

நடைபாதை ஒன்றில் அமைக்கப்பட்டது எங்கள் குடும்பம். வாட்டும் வெப்பம் — கொட்டும் மழை — இரண்டும் எங்களுக்கு நிலாவானது! "ஐயாமார்களே! பசியால் சாகிறோம்! காப்பாற்றுங்கள்: காசு தாருங்கள்" என்று தரையிலே எழுதி வைத்தோம். குரலெடுத்துக் கத்த தெம்பு ஏது உடலில்? அதைப் படித்தவர்கள் பரிகசித்தனர். 'பிச்சையிலே புது விதம்' என்று பொருள் கூறினர். நாங்கள் காட்சிப் பொருளானோம்.

இனியுமா இதைப் படிக்கவேண்டும்-என்று எண்ணிவிடாதீர்கள்: மூடிவிடாதீர்கள். படியுங்கள்: இந்தச் சோகக் கதையின் உச்சக் கட்டம் இனிதான் வருகிறது. 'ஐயோ, பயங்கரமே' என்று எண்ணி ஏங்கவேண்டிய சம்பவங்கள் அடுக்கடுக்காக வருகின்றன.

நான் ஊர் சுற்றினேன். பள்ளி சென்று பயில வேண்டிய பருவம் —நான் பரதேசியாக அலைந்தேன். ஒரு கவளம் உணவுக்காக தெருவுக்குத் தெரு—வீட்டுக்கு வீடு கத்தினேன். திட்டுகள் பதிலாகக் கிடைத்தன. மூட்டைத் தூக்கி உழைக்கலாம் என்றாலோ... அப்பப்பா! அதற்குத்தான் எத்தனைப் போட்டி! போட்டி மனிதர்களுடன் மட்டுமல்ல; ஐயா, என் மனம் குமுறுகிறது, நாய்களுடனும் போட்டியிட்டேன், எச்சில் இலைகளிலே ஒட்டிக்கொண்டிருக்கும் ஒரு சில சோற்றுப் பருக்கைகளுக்காக!

இப்படி ஒருநாள் ஊர் சுற்றிவிட்டு, எங்கள் குடும்பம் இருந்த இடம் வந்தேன். அங்கே...? ஒரு சிறு கூட்டம் நின்றது. நான் ஓடினேன். அப்பா ஒரு போலீஸ்காரனின் பிடியிலே சிக்கிக்கொண்டிருந்தார்.

நடைபாதையை விட்டு நகர்ந்தோடும்படி அந்தப் போலீஸ்காரன் சொன்னானாம். "எங்கே போவது?" என்று கேட்டாராம் அப்பா. "எங்கேயாவது தொலை; அல்லது குடும்பத்தோடு கடலிலே விழுந்து சாவு!" என்று எரிந்து விழுந்தானாம் அவன். இதைக் கேட்ட பின்னும் அப்பா சும்மா இருப்பாரா? "அடப்பாவி! உன் மனம் என்ன கல்லா?" என்று கத்தியிருக்கிறார். மானமே போய் விட்டதாம் போலீஸ்காரனுக்கு. போலீஸ்காரன் அதற்குமேல் அங்கு ஏன் நிற்கிறான்? அவனுக்கு ஒரு வழக்கு கிடைத்துவிட்டது அன்று. போலீஸ்காரனை அவமரியாதையாகப் பேசினான்; அடிக்கவும் வந்தான்—இப்படி என் அப்பாவின்மீது வழக்கு! எதிர்த்து வழக்காட வகைஏது எங்களிடம்? தண்டனை தவறாமல் கிடைத்தது. அப்பா சிறையில் அடைக்கப்பட்டார்!

"அப்பா" என்று அலறினேன், நான். மக்களின் இதயத்திலே — இல்லை; இல்லை கல்லிலே மோதி எதிரொலித்தது என் கூக்குரல்! இனி நான் என்ன செய்வது? அம்மாவின் கலங்கிய கண்கள் — சின்னஞ்சிறு சிசுவான என் தங்கையின் மழலைக்குப் பதிலான அழுகுரல்—இவைகள் என்னை வதைத்தன; பதறினேன்; பதைத்தேன்: முடிவில் கண்களைமூடிக்கொண்டு அழுதேன்!

ஒருநாள்...இரவு...

அம்மாவுக்கு கடும் சுரம்—சுரத்துடன் பசி-பசியுடன் என் தங்கப் பாப்பாவின் ஓயாத அழுகுரல் வேறு. அம்மா என்ன செய்வார்கள்? முணமுணத்தார்கள்; பைத்தியக்காரியைப் போல் பிதற்றினார்கள்; அழுதார்கள்.

சற்று நேரம் சென்றது.

பசியோடு தூங்கிவிட்ட நான் ஏதோ சப்தம்கேட்டு விழித்தேன். பரபரப்புடன் பக்கத்தில் பார்த்தேன். அம்மாவைக் காணோம்; பாப்பாவையும் காணோம். படபடப்புடன் எழுந்தேன். கொஞ்ச தூரத்திலே — கையில் குழந்தையுடன்-கடற்கரையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தார்கள் என் அம்மா!

"அம்மா" என்று அலறிக்கொண்டே நான் ஓடினேன். அம்மாவை நெருங்கினேன். முகத்தைக் கவனித்தேன். "என்னம்மா இது?" என்று கத்தினேன்.

அம்மா என்னைப் பார்த்தார்கள். "கண்ணே! நாம் செத்துப் போவமடா! அதோ பார், அந்தக் கடலலைகள் கத்திக் கத்தி நம்மைத்தான் அழைக்கின்றன" என்றார்கள்.

நான் அம்மாவைக் கட்டிக்கொண்டு அழுதேன். சமாதானம் செய்தேன். திரும்பி அழைத்து வந்தேன்.

அதற்குப் பிறகு நான் தூங்கவேயில்லை. பசியால் கதறிக் கொண்டிருந்தது தங்கை. எனக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. என்னவோ யோசித்தேன். எழுந்தேன். ஓடினேன். மீண்டும் திரும்பி வந்தேன். இப்போது என் கையில் ஒரு ரொட்டி இருந்தது. அதை அம்மாவிடம் நீட்டினேன். ஆனால், என்ன இது? ஏன் இப்படி மாறுகிறது அம்மாவின் முகம்?

"ஏது இது?"—அம்மா கேட்டார்கள்.

"தூங்கிக் கொண்டிருந்தான் டீக் கடைக்காரன். பாப்பா பசியால் அழுகிறதென்று...அவனுக்குகூட தெரியாமெ..."

நான் முடிக்கவில்லை; அதற்குள் ரொட்டி நடுத்தெருவிலே உருண்டோடியது. 'பளார், பளார்!' என்று என் கன்னத்திலே மாறி மாறி அறைகள் விழுந்தன. "ஆ! முட்டாளே! திருடினாயா? இனிமேல் செய்வாயா அப்படி?" என்று கத்தினார்கள் அம்மா.

"அம்மா......இல்லை அம்மா!" என்று நான் அழுதேன்.

"சாவதாக இருந்தாலும் திருடலாமா? மடையா! ஓடு...ஓடு... உழைத்துப் பிழைக்க வழியைத் தேடு"—அம்மா மீண்டும் கத்தினார்கள்.

நான் 'சடக்'கென்று எழுந்தேன். ஓடினேன். இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறேன்.

ஐயா, இந்த டைரி யார் கையில் கிடைத்தாலும், இந்த ஏழைச் சிறுவனுக்கு ஒரு சிறிய உதவி செய்ய வேண்டும். கீழே ஒரு முகவரி குறித்திருக்கிறேன். அங்கே—அந்த வீட்டு வாசலிலே சிறிய தோட்டமிருக்கும்; செங்கற்கள் அடுக்கியிருக்கும்; ஒரு விளக்குக் கம்பம்கூட இருக்கும்; பக்கத்திலே என் அம்மா, என் தங்கையுடன் படுத்திருப்பார்கள். அவர்களிடம் போய் இரத்தத்தால் பக்கத்தில் எழுதியிருக்கிறேனே, அதைப் படித்துக் காட்டுங்கள். 'உன் மகன் திரும்பும்வரை— வெற்றி வீரனாக வரும்வரை காத்திரு' என்று சொல்ல வேண்டும். 104, வெங்கடேசர் தெரு, அபிராமபுரம்—என்பது முகவரி. நான் முன்பின் தெரியாதவரிடம் வேண்டுகோள் விடுகிறேன். முடியுமா? செய்வீர்களா?...கெஞ்சுகிறேன்... காலைப் பிடிக்கிறேன்...ஐயா...... தயவு செய்து...

★

முடிந்துவிட்டது டைரி.

என் உடல் ஏனோ நடுங்கியது. கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன். 'ஐயோ; சிறுவனே!' என்று அலற வேண்டும்போல் இருந்தது. மாலையின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தேன்.

★

மாலை— தேடித் தேடி அலைந்தேன்-முகவரிக்குரிய வீடு கிடைத்

○ தொடர்ச்சி 10-ம் பக்கம்

## ‘எழுத்தாணி’

மனத்துணைநாதன், பம்பாய்.
(?) பிரம்மச்சாரி யென்றால் அர்த்த மென்ன?
பகிரங்கமாகத் திருமணம் செய்து கொள்ளாதவர்கள்.

அ. சு. அப்துல்ஹை, அரகண்ட நல்லூர்.
(?) திருப்பதி மொட்டை, பழனி மொட்டை, நாகூர் மொட்டை — மூன்றுக்கும் வித்தியாசம் என்ன?
முறையே, வைணவம், சைவம், இஸ்லாம் — என்று மதங்கள் தான் வித்தியாசம்—மூட நம்பிக்கையைப் பொறுத்தவரையில் மூன்றும் ஒன்றே!

(●) இராமசாமி; வெள்ளமடை.
(?) இந்தியாவில் யாருக்கு மதிப்பு அதிகம்?
கல்லுக்கு!

செ. வி. தினகரன்; பெங்களூர்.
(?) ஓய், எழுத்தாணியாரே: நீர் நேருவிடமிருந்து எதை எதிர்பார்க்கிறீர்? ஆச்சாரியாரிடமிருந்து எதை எதிர்பார்க்கிறீர்?
நேருவிடமிருந்து நேர்மையையும், ஆச்சாரியாரிடமிருந்து அடக்கத்தையும் எதிர்பார்க்கிற அளவுக்கு நான் யோசனையற்றவனல்ல!

கமலாதாசன்; சென்னை-6.
(?) ‘இரு குழல் துப்பாக்கி’ என்று கூறப்பட்ட தி. மு. க. தேசியக் கொடி எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ளாதது ஏன்?
இரு குழலில் ஒரு குழலை இயங்காவண்ணம் தக்கை வைத்து அடைத்து விட்டார் பெரியார்; அதனால்தான்!

(?) மனிதனால் ஆகாதகாரியம்எது?
சிறிது நேரம் சிந்தையை அடக்கி சும்மா இருப்பது!

மா. முத்துக்குமாரசாமி; கருவாழக்கரை.
(?) எதிர்கால பாரதமாதா எப்படிக் காட்சியளிப்பாள்?
நொண்டியாகக் காட்சியளிப்பாள், கால்களாயிருக்கும் திராவிடம் பிரிந்த பிறகு!

பழ. வையாபுரி; ஒருபந்தூர்.
(?) எழுத்தாணி அண்ணா! அறிஞர்கள் சரிதை என்றால் ஆவலாகப் படிக்க முடிகிறது. பாடம் படிப்பதென்றால் கசப்பாக இருக்கிறதே; இதற்கு என்ன செய்யலாம்?
தொடர்ந்து அறிஞர்களின்வரலாற்றையே படி; அதன்படி நட! பின் துருவநட்சத்திரம் போல் நடமாடுவாய்!

> இந்த வாரம் பரிசு பெறும் தோழர்;
> (●) செ. இராமசாமி,
> வெள்ளமடை (அஞ்சல்)
> கணபதி (வழி)
> (கோவை மாவட்டம்)

அக்கீம்; அரகண்டநல்லூர்.
(?) அட்டையை யாருக்கு ஒப்பிடலாம்?
சங்கடமான கேள்விதான்! வடநாட்டானுக்கு ஒப்பிட்டால் வெளிநாட்டு ஏகாதிபத்யக்காரன் கோபித்துக் கொள்வானே!

(?) பூக்களில் தேன் இருக்கிறதே; அது எப்படி?
பூமித்தாய் தாவரக் குழந்தைகளுக்கு ஊட்டும் பால்தான், அந்தத் தேன்!

டி. பெருமாள்; டேகுரோடு; பூனா.
(?) ரசிகன் விரும்புவது எதை?
நல்ல கதை!

## ஜெனிவா ....

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

★★ மேலும் ஆந்தொனிஈடன் போன்றவர்கள் வல்லரசுச் சந்திப்பை தேர்தல் பிரச்னையாக வைத்துத்தான் இங்கிலாந்து மக்களிடம் பெருவாரியான வாக்குகள் பெற்றிருக்கிறார்கள். பிரெஞ்சுப் பிரதமரின் நிலையும், இதேதான்!

★★ அது தவிர, ரஷ்யர்கள் ஸ்டாலின் மறைவுக்குப் பிறகு தங்கள் கொள்கையை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

★★ இந்தச் சூழ்நிலைதான்—முக்கியமாக பீதிதான் ஜெனிவா மாநாட்டைக் கூட்டியிருக்கின்றன.

★★★★ இன்னொன்று! வல்லரசுகள் சந்திப்பினால் உலகப் புகழ் பெற்றிருக்கிறதே ஜெனிவா நகரம்—அது எங்கிருக்கிறது தெரியுமா?

ஸ்விட்சர்லாந்தில்!

கைக்கடியாரத் தொழிலையை நம்பியிருக்கும் சின்னஞ் சிறு நாடு! பரப்பளவு 15,950 மைல்கள்தான்! 43-லட்சம் மக்கள் தான் அங்கே வாழ்கிறார்கள்!

★ ஸ்விட்சர்லாந்தைவிட பல மடங்கு பெரியது நாம் கேட்கும் திராவிடம்!

★ அதைவிடப் பல்வளம் கொண்டது!

★★ நம்மை விட உலக சமாதானத்தில் அதிக அக்கரை கொண்டவர்களாய் நடித்து, அகில உலகம் பசும் நண்பர்கள் மீண்டுமாருமுறை இது குறித்து சிந்திக்கட்டும்!

★

(?) நாம் ஐந்தாண்டுத் திட்டங்களினால் புறக்கணிக்கப்படுகிறோம்-என்ற சான்று மட்டும் நாட்டுப் பிரிவினைக்கு ஆதாரமாக இருக்க முடியுமா?
ஏன் முடியாது? ‘புறக்கணிக்கப்படுகிறோம்’ என்கிற உணர்ச்சிதான் புதுநாடுகளுக்கும், புரட்சிகளுக்கும் பிறப்பிடம்! பிரிட்டிஷ் பாராளுமன்றம் புறக்கணிக்கிறது-என்கிற ஒரே காரணம் மட்டும் அமெரிக்காவின் விடுதலைக்கு அடிப்படையாக இருந்திருக்கிறதே!

அன்புள்ள ஆசிரியருக்கு,
வணக்கம்.

ஒரு பத்திரிகையின் வளர்ச்சிக்கு கருத்து அவசியமா; அல்லது கவர்ச்சி அவசியமா என்று பார்க்குமிடத்து, கருத்துத்தான் அவசியமென யாவருமே ஒப்புக் கொள்வர். ஆனாலும், அக்கருத்துக்களை, பத்திரிகைகளில் கவர்ச்சியுடன் வெளியிட்டால்தான், யாவரும் விரும்பிப் படிக்கின்றனர். இது என் முடிவாக மட்டும் நான் கருதவில்லை. தாங்கள் முரசொலி துவங்கிய நாளிலிருந்து இன்று வரை, அத்தகைய கவர்ச்சியை உண்டு பண்ண வேண்டும் என்ற நோக்கமுடன், தாங்கள் அவசியமான நேரங்களில், செய்திகளையும், துணுக்குகளையும், படங்கள் மூலம் விளக்கி, லாபமில்லையெனினும், மக்களுக்கு கருத்து மனதில் பதிந்தால் போதுமென்ற நல்ல எண்ணத்துடன் வெளியிட்டு வந்திருக்கின்றீர்கள். மும்முனைப் போராட்ட நினைவு மலர், பொங்கல் மலர், சென்ற வார இதழ்—இவைகளே அதற்கு சான்றாகச் சொல்லலாம். திராவிட முன்னேற்றக் கழக செயற்குழு உறுப்பினர்களின் புகைப் படங்களைத் தயாரிப்பதற்கு மிகவும் அக்கரை எடுத்துக் கொண்டு, தக்க சமயத்தில் வெளியிட்டது ‘முரசொலி’ பத்திரிகை எதிர்காலத்தில் பொலிவுறத் திகழும் என்பதற்கு எடுத்துக்காட்டு. மேலும் கழகத் தோழர்களுக்கு அது ஒரு பயனுள்ள தொகுப்பு. வானொலியில் அறிஞர் அண்ணா அவர்களும், திரு. ம. பொ. சி. அவர்களும், ‘பத்திரிகைத் தொழில் சுயநலமா, பிறநலமா?’ என்று வாதமுறையில் பேசியது நினைவிருக்கலாம். பிறநலத்திற்காக பத்திரிக்கை நடத்தும் சிலரில் தாங்களும் ஒருவராகி விட்டீர் என்று மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன்.

—து. மு. இராசு,
அரியலூர்.

அன்புடையீர்,

புதையல் கதையில் எழுத்துக்களை சிறியவையாக்கியிருக்கிறீர்கள். நன்றி. மேலும், தாங்கள் புதையல் கதையின் இரு ஓரங்களிலும் கலர் ‘பார்டர்’ அடிக்கின்றீர்கள். அப்படி அடிப்பதினால் நடுவில் இடைவெளி அதிகம் இல்லாமல் சேர்ந்துள்ளது. அதனால் இதழ்களை ஒன்று சேர்த்து தைக்கும் போது எழுத்துக்கள் மறைகின்றன.

—கோ. தாமராசு,
அந்தணப்பேட்டை.


## புரட்சிக் கவிஞர் வெற்றி!

சென்ற கிழமை புதுவையில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெரு வெற்றி பெற்றிருக்கிறார்.

அடிமை விலங்கொடித்து, ஆனந்தக் கடலாடும் பாண்டியின் சட்டசபையிலே இனி கவிஞரின் கற்கண்டுக் கருத்துகள் நடமாடும்—என்பதறிந்து பேருவகை அடைகிறோம்.



வோட்டு விபரம்:

| | |
|---|---|
| பாரதிதாசன் | 1684 |
| அன்சாரி (காங்கிரஸ்) | 1403 |
| முனுசாமி | 830 |

## பூரிப்பு நிறைந்த புதுச் செய்தி!

## “முரசொலி”

ஆங்கிலத்திலும் வார இதழாக வருகிறது.

ஆசிரியர்:

மாறன், பி. ஏ. (ஹானர்ஸ்.)

விரைவில் தெலுங்கிலும், மலையாளத்திலும்!

விபரங்கட்கு:

நிர்வாகி,
முரசொலி (ஆங்கில இதழ்)
சென்னை-6


ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. ‘முரசொலி’ அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.